உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

[மலர் 26] பிலவங்க ஆண்டு வைகாசித் திங்கள் 10—6—67 [இதழ் 7]

குருபூஜை விழாவில் :



ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள் கொலுவீற்றிருந்து அருட்காட்சி வழங்குதல்.

ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

நன்னெஞ்சே நீகேட்ட
நன்மையெலாம் சொல்லுதற்கு
கன்னெஞ்ச மாலயனுங்
காணாதோன்—வன்னெஞ்சர்
இன்னகுறை உண்டென்னா
ஈசன் எதிர்வந்தால்
என்னகுறை சொல்லாய்
இனி. (53)

ஆசிரியர் :-
வித்துவான்,
சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-
வித்துவான்,
சி. அருணைவடிவேல் முதலியார்.

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26 | 10-6-67 | இதழ் 7

உட்பொருள்

எண்		பக்கம்
1	குருவருளும் திருவருளும்	353
2	ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை	358
3	சித்தாந்த வினாவிடை	364
4	ஞானப்பூ !	371
5	தையல்நாயகி அந்தாதி	372
6	பாணன் படும் பாடு	376
7	திருத்தக்க தேவரின் உவமைநயம்	379
8	கூட்டுப் பண்ணை	385
9	கனவினால் விளைந்தது	387
10	ஜ்யேஷ்டாதேவி	391
11	திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு	398
12	செய்திகள்	402
13	எதிர்காலம்	406
14	Extract from the Visitor's Book	375

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26] பிலவங்க - வைகாசி - 10—6—67 [இதழ் 7

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

குருவருளும் திருவருளும்

உயிர்கள் அடையும் பேறுகள் எல்லாவற்றிலும் சிறந்த பேறு இறைவன் திருவருட் பேறே. "அருளிற் பெரியது அகிலத்து இல்" என்கின்றார் உமாபதி சிவாசாரியார். திருவருளை எவ்வாறு பெறுவது? அஃது இறைவனுடையது. ஒருவருடைய பொருளை மற்றொருவர் பெறவேண்டுமாயின், அதனை அவர் கொடுக்கவே பிறர் பெறவேண்டும். இல்லையேல் பெறுதற்கு வழியில்லை. இனிச் சிலர் பிறருடைய பொருளை அவர் அறியாமலே வஞ்சித்துக் கவர்ந்துகொள்கின்றனர். அஃது இறைவன் திருவருளிடத்தில் இயலாது

ஏனெனில், பொருளை வஞ்சித்துக் கவர்தற்கு அதனை உடையவன் உறக்கமோ மறதியோ உடையவனாய் இருத்தல் வேண்டும்; இறைவனுக்கு அவை இரண்டும் எக்காலத் திலும் இல்லை. ஆதலின், அவனை அறியாமல் அவன் திருவருளைப் பெற இயலாது. இதனையே

" வஞ்ச முடனொருவன் வைத்த நிதிகவரத்
துஞ்சினனோ போயினனோ சொல் "

என்று கேட்கின்றார் உமாபதி சிவாசாரியர். எனவே, இறைவன் திருவருளை அவன் கொடுக்கப் பெறுதல் வேண்டு மன்றிப் பிறிதொரு வழியில்லை என்பது விளங்கும்.

இறைவன் தனது திருவருளை உயிர்கட்கு எவ்வாறு வழங்குகின்றான்? 'தாவரம், சங்கமம்' என்னும் இரு வகைத் திருமேனிகளில் நின்று அவை வழியாக வழங்கி யருள்கின்றான்.

" தாபர சங்க மங்கள் எனும்இரண் டுருவில் நின்று
மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க் கருளை வைப்பன் "

என்பது சாத்திரம். தாவரம், அசையாத் திருமேனி. அவை திருக்கோயிலுள் இருக்கும் திருமேனிகள். சங்கமம் அசையுந் திருமேனி - நடமாடுங் கோயில்கள். அவை அடியார் வேடங்களும், 'ஆசான் மூர்த்தி' எனப்படும் குருவடிவங்களுமாம். இவைகளில் குருவடிவமே இறைவன் இனிது விளங்கிநின்று தன் திருவருளைத் தெளிவுற வழங்கும் திருவடிவம். அதனால், அத்திருவடிவத்தையே சிறப்பாக 'அருளுரு' எனக் குறிக்கின்றார் உமாபதி சிவாசாரியர்.

இறைவன் குருவடிவாய் வந்து ஆட்கொள்ளும் பேற் றினைப் பெற்றவர்கள், பெருந்தவப் பேறுடையவர்கள் அவர்கள், தாம் வேண்டும் நலங்கள் எவற்றையும் தம் குரு வடிவின்முன் நின்று விண்ணப்பித்து எளிதில் பெறுதற் குரியராவர். அதனால், அவர்கள் பிரிவினையறியா நிழலது போலத் தம் குருமூர்த்திகளின் அடிநிழலைப் பிரியாது அங்குத் தானே பணிசெய்து கிடப்பர். பிரிவு நேரின் ஆற்றாது

அலமருவர். இத்தகைய பத்திநிலை யுடையார்க்கே இறைவன் தனது திருவருளை நிரம்ப வழங்குவன்.

குருவடிவங்கள் நம்மனோர் வடிவம்போலவே காணப்படினும், அவை அருட்டிருமேனிகளே. ஆயினும், அவை வேறுவகையாகக் காணப்படாது நமது வடிவம்போலவே காணப்படுதல், நம்மனோர் அச்சம் இன்றி அருகணைந்து அருளைப் பெறுதற்பொருட்டேயாம். இறைவன் தனது உண்மைத் திருமேனியைக் காட்டியருளுவனாயின், அதனைக் காணுதல் நம்மனோர்க்கு இயலாது ; அச்சமும் பெரிதாம். முருகக் கடவுள் ஒருமுறை தனது விசுவரூபத்தை மகாமேரு மலையில் தேவர்களுக்குக் காட்டியபொழுது தேவர்களே அதனைக் காணமாட்டாதவர்களாய் விரைவில் அதனை மறைத்து வேறு வடிவில் காட்சி வழங்குமாறு வேண்டினர் என்று கேட்கின்றோம். அத்தகைய வடிவம் எப்பொழுதும் நம் அருகிருந்து நமக்கு ஆவன பலவற்றையும் செய்தல் இயலாது. ஆகையால், நம்மைத் தன்மாட்டு வருவித்துக் கொள்ளுதற்கு இறைவன் நம்மைப்போலவே வடிவுகொண்டு வரும் திருமேனியே குருமூர்த்தம். இதனை, மான் முதலிய விலங்குகளைப் பிடித்தற்கு அவற்றின் இனத்துள் ஒவ்வொன்றைப் பார்வை மிருகமாக வளர்த்து அவற்றின் வழியாக அவைபோன்ற பல விலங்குகளைப் பிடித்தல்போல, நம்மனோர் போலக் காட்டி நம்மை ஆட்கொள்ளுதற்கு வந்த வடிவம் என்று கூறுவர் அறிந்தோர்.

" பார்வையென மாக்களைமுன் பற்றிப் பிடித்தற்காம்
போர்வையெனக் காணார் புவி "

என்பது திருவருட்பயன். இம்முறையால், " குருவே சிவம் எனக் கூறினன் நந்தி " என்ற திருமூலர் வாக்கின்படி, குருமூர்த்திகள் இறைவனேயாதல் தெளிவு.

" கண்ணுதலும் கண்டக் கறையும் கரந்தருளி
மண்ணிடையின் மாக்கள் மலமகற்றும்-வெண்ணெய்நல்லூர்
மெய்கண்டான் "

என்று அருணந்தி சிவாசாரியர் தம் குருவாகிய மெய்கண்ட தேவரை, நெற்றிக் கண், நீலகண்டம் முதலியவைகளை மறைத்துவந்த சிவபிரான் என்று குறிப்பிடுகின்றார். ஏனையோரும் இவ்வாறே தம் குருமூர்த்திகளைக் குறிப்பிட்டு வாழ்த்துதலைக் காணலாம். இவற்றால் குருவே சிவமாதல் விளங்குதலின், குருவருளே இறைவன் திருவருள் என்பதும், இனிது விளங்கும். என்றாலும் நிலைவேறுபாட்டால் 'குருவருள்' என்றும், 'திருவருள்' என்றும் இரண்டையும் வேறுவேறுபோல வழங்குகின்றோம்.

இனி, 'திருவருள்' என்று வழங்கப்பெறுவது இறைவனது சத்தியே. 'இச்சை, ஞானம், கிரியை' எனச் சத்தி மூன்றுவகைப்படும். அவற்றுள் இச்சை என்றும் ஒரு நிலையிலே இருக்கும். ஞானமும், கிரியையும் அவ்வப்பொழுது வெவ்வேறு வகையாக நிகழும். அவைகளில் உயிர்களுக்கு உள்ள குற்றமாகிய பாசத்தை அழிப்பது கிரியா சத்தி. அதன்பின் அவ்வுயிரினது அறிவின்கண் விளங்கிநிற்பது ஞானசத்தி. கிரியாசத்தி பாசத்தை நீக்கும் செயலே 'தீட்சை' என்று வழங்கப்படுகின்றது. 'நோக்கம், பரிசம், மானதம், வாசிகம், யோகம், சாத்திரம், ஔத்திரி' முதலாகத் தீட்சை பலவகைப்படும். இவை அனைத்தும் இறைவனது கிரியா சத்தியின் வியாபாரங்களாகும். இவை குருமூர்த்தி வாயிலாகவே நிகழ்வதால், இவற்றையே சிறப்பாக, 'குருவருள்' என்றும், இவற்றால் பாசம் நீங்கப்பெற்ற உயிரினது அறிவின்கண்ணே விளங்கிநிற்கும் ஞானசத்தியையே சிறப்பாக, 'திருவருள்' என்றும் வழங்குவர். பாசம் நீங்காமல் ஞானம் விளங்காது. ஆதலின், குருவருள் இன்றித் திருவருள் வாராது என்பது தெளிவாகும்.

குருவருளால் திருவருள் கைவரப்பெறின், அதன் பின்னர்க் கிடையாத பொருள் இல்லை. அதனால், குருவருள் பெற்றோர்க்கு அக் குருமூர்த்திகளே எல்லாவற்றையும் தரும் இறைவனாக விளங்குவர். அதனால், அவர்கள், பரப்பிரமம் இவன் என்றும், பரசிவன்தான் என்றும், பரஞானம் இவன்

என்றும், பராபரன்ருன் என்றும், அரன்தரும்சீர் நிலையெல்லாம் இவனே என்றும் அருட்குருவையே வழிபட்டிருப்பார்கள்.

இத்தகைய குரு பரம்பரைகள் பல உள. யாவர்க்கும் முதற்குரு சிவபெருமானே. அப்பெருமான் ஆசிரியத் தன்மையின் அதிகாரத்தைப் பலரிடம் வைத்துக் குரு பரம்பரையில் தனது திருவருளை வழங்கிவருகின்ருன்.

> "திருமால் இந்திரன் பிரமன் உபமனியன்
> தபனன் நந்தி செவ்வேளாதித்
> தருமமுது குரவருக்கும் தனதருளால்
> ஆசிரியத் தலைமை நல்கி
> வரும்எவர்க்கும் முதற்குருவாய் மெய்ஞ்ஞான
> முத்திரைக்கைம் மலரும் வாய்ந்த
> உருவழகும் குறுநகையும் காட்டிஅருள்
> தரும்சிவனை உளத்துள் வைப்பாம்"

என்னும் சிவதத்துவ விவேகச் செய்யுள், சிவபெருமான் குருபரம்பரைகள் பலவற்றின்வழித் தனது திருவருளை வழங்கிவரும் முறையை நன்கு விளக்குகின்றது. ஆதலின், திருவருளை விரும்புவோர் இம் முறையில் குருவருளைப் பெறுதல் இன்றியமையாதது.

இதற்கு வாய்ப்பாக நந்தி மரபில் மெய்கண்டான் சந்தானமாய் விளங்கும் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன ஆதி பரமாசாரியர் ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக சுவாமிகளது குருபூஜை விழா, அண்மையில் மிகச் சிறப்பாக நடைபெற்ற காட்சியும், 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் பட்டணப்பிரவேசம் செய்து, அருட்கோலு வீற்றிருந்து, அனைவர்க்கும் அருளொளி வழங்கிய காட்சியும் அன்பர்கள் உள்ளத்தில் அகலாது நின்று ஆரா இன்பம் அளிப்பனவாகும். இக் குருவருளும், திருவருளும் யாவர்க்கும் என்றும் எல்லா நலங்களையும் அருளுவனவாக.

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் வழங்கியருளிய

அருளுரை

சிவபோகம்

காராரும் ஆணவக் காட்டைக் களைந்தறக்
கண்டகங் காரமென்னும்
கல்லைப் பிளந்துநெஞ் சகமான பூமிவெளி
காணத் திருத்திஅதிலே
பராரும் அறியாத மோனமாம் வித்தைப்
பதித்தன்பு நீராகவே
பாய்ச்சிஅது பயிராகு மட்டும்மா மாயைவன்
பறவைஅணு காதவண்ணம்
நேராக நின்றுவிளை போகம் புசித்துய்ந்த
நின்னன்பர் கூட்டம் எய்த
நினைவின் படிக்குநீ முன்னின்று காப்பதே
நின்னருட் பாரமன்றோ
ஆராரும் அறியாத சூதான வெளியில்வெளி
யாகின்ற துரியமயமே
அண்டபகி ரண்டமும் அடங்கஒரு நிறைவாகி
ஆனந்த மானபரமே.

— *தாயுமானவர்.*

உலகில் உள்ள உயிர்கள் யாவும் உறங்குகின்ற நேரம் தவிர விழித்திருக்கும் நிலையில் எவையேனும் சில செயல்களைச் செய்துகொண்டேயிருக்கக் காண்கிறோம். உடல் உழைப்பின்றி ஓய்வுபெற்றிருக்கவேண்டும் என்ற விருப்பம் நிரம்ப இருந்த போதிலும் அவ்வாறில்லாமல் தம் விருப்பத்திற்கு மாறாக எவையேனும் சிலவற்றைச் செய்துகொண்டிருக்க வேண்டிய நிலை ஒவ்வோர் உயிரினிடத்தும் காணப்படுகின்றது. 'யானை

முதலா எறும்பீருய்' என்று சொல்லும் முறைப்படி, மிகச் சிறிய உயிராகக் கருதப்படுவது எறும்பு. அஃது எவ்வளவு சுறுசுறுப்புடன் செயற்படுகிறது! பறவைகள் விடியலில் எழுந்து சத்தமிட்டுக்கொண்டு பலதிக்குகளிலும் பறந்தோடு கின்றன. பகலெல்லாம் பறந்து திரிந்து, ஒளிமறைந்து ஒன்றும் செய்ய இயலாத இரவு வரும்பொழுதே அவைகள் தங்கள் இடத்திற்குத் திரும்புகின்றன. விலங்குகளும் இப்படியே. இவையெல்லாம் அஃறிணை உயிர்கள் என்ருல், உயர்திணையாகிய மக்கள் நிலையும் இதைவிட வேருய் இல்லை. அஃறிணை உயிர் களாவது ஓரளவில் இரவில் ஒன்றும் செய்வதில்லை. உயர்திணை உயிராகிய மக்கள் அல்லும், பகலும் அலைந்து திரியும் நிலையை உடையவர்களாய் இருக்கிருர்கள். இவையெல்லாம் எதற்கு என்று நோக்குவோமாயின், 'எல்லாம் வயிற்றுப் பெருமான் பொருட்டு' என்கிருர் ஒரு புலவர். 'சாணும் வளர்க்க அடி யேன் படுந்துயர் சற்றல்லவே' என்பது பட்டினத்தார் வாக்கு.

"சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும — போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம்"

என்று, மக்கள் படும்பாட்டை விரித்துப் பாடுகிருர் ஔவையார். எனவே, எல்லாச் செயல்களுக்கும் முதற்பயன், பசிதீர உண்பது. அதன்பின் உடுத்தல், அணிதல் முதலிய நல்வாழ்வுகள்.

உண்பது, 'புசித்தல்' என்றும், உண்ணப்படும் பொருள், 'போகம்' அல்லது 'போக்கியம்' என்றும் சொல்லப்படும். ஆகவே, போகத்தைப் பெறுதற்பொருட்டுத்தான் எல்லாத் தொழில்களும் செய்யப்படுகின்றன. என்ருலும் எல்லாத் தொழிலும் நேரே போகத்தை - உணவுப் பொருளைக் கொடுப்ப தில்லை. உழவுத் தொழில் ஒன்றுதான் போகத்தை நேரே கொடுக்கின்றது. அதனல், விளையும் பயன் ஒன்றையே, 'போகம்' என்று குறிப்பிடுகின்ருர்கள். எந்தத் தொழிலைச் செய்பவரும் முடிவில் உழவுத்தொழில் செய்பவரிடம் சென்று தான் போகத்தைப் பெறவேண்டியவராகின்றனர். அதனல், நேராக உழவுத்தொழிலைச் செய்வதே நல்லது என்பதை,

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்; அதனால்,
உழந்தும் உழவே தலை"

என்னும் குறளால் குறிப்பிடுகின்றார் திருவள்ளுவர். 'உழவுத் தொழிலே பயனுடைய தொழிலாய் இருப்பினும், அதைப் பலர் செய்யாமல் போதற்குக் காரணம், அது மிகவும் உழைத்துச் செய்யவேண்டியதாய் இருப்பதே' என்பதை, 'உழந்தும்' என்ற சொல்லால் அவர் குறிக்கின்றார். எனவே, உண்மையான உழைப்பு உழவுத்தொழில் ஒன்றே

உழவுத்தொழிலால் விளையும் போகத்தை, 'உடற்போகம் அல்லது உலக போகம்' என்று சொல்லலாம. உயிர்ப்போகம் ஒன்று உள்ளது, அது 'சிவபோகம்' என்று சொல்லப்படும். உடற்போகம் விளைவதற்கே உழவுத்தொழில் மூலமாகக் கடினமான உழைப்பைச் செய்யவேண்டும் என்றால், உயிர்ப்போகம் விளைவதற்கு எவ்வளவு உழைப்புவேண்டும்! அந்த உழைப்பு அனைத்தையும் உழவுத் தொழிலோடு ஒப்புமைப்படுத்தி ஒரு பாடலில் அழகுபடக் காட்டுகின்றார் தாயுமானவர். அந்தப் பாடலே முதலில் தரப்பட்டது. உடற்போகம் விளைவதற்குரிய உழவுத் தொழிலைச் செய்வது கடினந்தான்; ஆனால், செய்து விட்டால், கவலையின்றியிருக்கலாம். அதுபோலவே சிவபோகம் விளைவதற்குரிய செயல்களைச் செய்வது கடினந்தான்; ஆனால், செய்துவிட்டால் என்றுமே கவலையின்றியிருக்கலாம்.

உழவுத்தொழில், நிலத்தை ஆதாரமாகக் கொண்டது அதுபோல, சிவபோகச் செயல் உள்ளத்தை முதலாகக் கொண்டது. ஓர் உழவனுக்கு உள்ள நிலம் காடாகவும், அதில் பாறை பொருந்தியும் இருக்குமாயின், அவன் என்ன செய்வது? அதை அப்படியே உழ இயலுமா? முதலில் காட்டை அழிக்க வேண்டும். அதன்பின் பாறைகளை எவ்வகையிலேனும் உடைத் தெறிந்து நிலத்தைக் காணவேண்டும். அதுபோல, 'உள்ளம்' என்னும் நிலம் 'ஆணவம்' என்னு அடர்ந்த காட்டினால் மூடப் பட்டுள்ளது. அடர்ந்த காட்டில் கறுத்த இருள்தான் சூழ்ந் திருக்கும். ஆணவக் காட்டினால் அறியாமை நிறைந்திருக் கின்றது. அதனை, 'காராரும் ஆணவக் காடு' என்று குறிப்பிடு கின்றார். அந்தக் காட்டினை வேரோடு களைந்தெறிந்து வெட்ட வெளியாக்குதல் வேண்டும். வெட்டவெளியாகச் செய்வதைத்

தான், 'அறக்கண்டு' என்றார். காட்டைக் களைந்து வெட்ட வெளியாக்கிவிட்டால், அங்கே இருள்நீங்கி ஒளி பிரகாசிக்கும். அதுபோல ஆணவத்தைப் போக்கினால், அறியாமை நீங்கி அறிவு பிரகாசிக்கும்.

உள்ளமாகிய நிலத்தில், 'நான் ! நான் !' என்கின்ற அகங்காரம் வலிமையான கற்பாறைபோல அழுந்திக் கிடக்கின்றது. அதைப் பெயர்த்தெறிவதோ, உடைத்தெறிவதோ மிகமிகக் கடினம். அதை உடைத்தெறிந்துவிட்டால், உள்ளே நெஞ்சகமான பூமி வெளித்தோன்றும். அதன் பின், பாறையைத் தகர்த்தெறிந்த இடமாகலின் நிலம் சமமாய் இராது; மேடு பள்ளங்களாய்க் கிடக்கும். அதைத் திருத்திப் பண்படுத்துதல் வேண்டும். ஆணவமாகிய காட்டைக் களைவதற்கும், அகங்காரமாகிய கல்லைப் பிளப்பதற்கும், உள்ளத்தைப் பண்படுத்துவதற்கும் கருவி, அருளாளர்களுடைய அருள்வாக்குக்களும் குருவினுடைய உபதேசமுந்தான்.

இவற்றைக்கொண்டு நிலத்தைப் பண்படுத்தி உழுதபின்பு, அதில் நல்ல விதையை விதைத்தல் வேண்டும். அந்த விதை எது ? 'மோனமாம் வித்து' என்கின்றார் தாயுமானவர். மோனம் - மௌனநிலை. அதாவது, தான் என்பது இன்றி, "எல்லாம் அவன் செயலே' என்று இருக்கும் அருள்நிலை. அந்த அருளாகிய வித்து இங்கெல்லாம் எளிதில் கிடைப்பது அன்று என்பதை, 'பார் ஆரும் அறியாத மோனமாம் வித்து' என்று கூறுகிறார். பூமியில் ஒருவரும் பார்த்தறியாத அருளாகிய அந்த வித்தினை இறைவன் நேரே தோன்றியோ அல்லது ஆசாரியர் மூலமாகவோ கொடுக்கப்பெற்று, முன்சொன்ன பண்பட்ட நிலமாகிய உள்ளத்தில் பதிக்கவேண்டும்-விதைக்க வேண்டும்.

விதையை ஊன்றியபின்பு அது முளைத்து வளர்வதற்கு நீர் பாய்ச்சவேண்டும். அருளாகிய வித்தைப் பதித்து அன்பாகிய நீரைப் பாய்ச்சினால், சிவமாகிய முளை அதனின்றும் தோன்றி வளர்ந்து தனது பேரின்பம் எனப்படும் சிவபோகமாகிய விளைவைக் கொடுக்கும். பயிரும், விளைவும் முற்றிப் பயன்தரும் வரையிலும் உழவன் காத்தல் என்ற தொழிலைக் கருத்துடன் செய்யவேண்டும்.

" ஏரினும் நன்றால் எருவிடுதல்; கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு "

என்று திருவள்ளுவரும் உழவுத் தொழிலுக்கு இறுதியில் காவல் இன்றியமையாதது எனக் குறிக்கின்றார். பாதுகாவல் இல்லையேல், பயிரை விலங்குகளும், கதிரைப் பறவை முதலியவைகளும் வந்து அழித்துவிடும். அதனையே, ' அது பயிராகுமட்டும் மாமாயை வன்பறவை அணுகாத வண்ணம் - நேராக நின்று' என்றார். மாயையென்றது, மாயையின் காரியமாகிய உலகம் செய்கின்ற மயக்கத்தை. அருள்பெற்றபின்பும், பழைய பழக்கத்தால், உலக ஆசைகள் தோன்றுமாயின், அதனை அந்த அருள்ஞான உணர்வினால் கடிந்து ஒதுக்குதல் வேண்டும். அவ்வாறு செய்தால், சிவம் என்னும் பயிர் வளர்ந்து, சிவபோகமாகிய விளைவைத்தரும். அவ்வாறு செய்த சிவபோக விளைவைப்பெற்று உண்டு மகிழ்கின்றவர்களே இறைவன் அடியவர்கள் என்பதை, ' விளைபோகம் புசித்து உய்ந்த நின் அன்பர் கூட்டம்' என்றார் தாயுமானவர்.

இத்தகைய அன்பர் கூட்டத்தை அடையவே தாயுமானவர் விரும்புகிறார். சிவபோகத்தைப் புசிக்கின்றவரிடையே போய்ச் சேர்ந்தால் அந்தச் சிவபோகம் எளிதாகக் கிடைத்துவிடுமன்றோ ! அதனால், அந்த நினைவு முற்றுப்பெறும் வண்ணம் செய்து பாதுகாக்கும்படி இறைவனை அவர் வேண்டிக்கொள்ளுகிறார். ஆனால், அவ்விறைவன் எங்கே இருக்கிறான் ? யார் யாரும் அறிய இயலாத சூதான - மறைபொருளாயுள்ள பரவெளியில் உள்ளான். எவ்வாறு உள்ளான் ? அண்டங்களை எல்லாம் தன்னுள் அடக்கி நிற்கும் ஆனந்தமே வடிவமாக உள்ளான். அவனை நோக்கியே தமது வேண்டுகோளைச் செய்கின்றார். இதனால், தாயுமானவருக்குச் சிவபோகம் புசித்து உய்வதில் எத்துணை விருப்பம் என்பது தெளிவாகும். எங்கள் ஆதிபரமாசாரியரும்,

" புசிப்போம் சிவபோகம் பூரணமாய் எங்கும்
வசிப்போம் உலகில் வசியோம் — முசிப்பின்றி
வாழ்வோம் சிவத்தையுணர் மாதவர்தம் பொன்னடிக்
தாழ்வோம் எமக்கார் சரி " [கிழ்த்.

என்று அருளிச் செய்கின்றார்கள். இந்தச் சிவபோகம் விளைவதற்குத் தாயுமானவர் மேற்சொல்லிய உழவுத்தொழிலைச் செய்தல் வேண்டும் என்கிறார் அப்பர் பெருமானும்,

" மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகில்
சிவகதி விளையு மன்றே "

என்று அருளிச்செய்கின்றார்.

சிவபோகத்தை வேண்டும் இந்த 'ஆனந்தமானபரம்' என்ற பகுதியில் தாயுமானவர், இறைவனை நோக்கி, 'உனக்கு ஆட்பட்ட நான், உலகில் உள்ள குற்றங்கள் பலவற்றிற்கும் ஆளாயிருத்தல் தகுமோ? உன்னை உள்ளபடி அறிதல் அருட்கண்ணால் அன்றி இயலுமோ? அறிஞர்கள் அந்த அருளையே நாட, அடியேன் இந்த அகிலத்தை நாடுகிறேன்; ஈதென்ன கொடுமை! குணம், குற்றம் எல்லாம் நீ என்றால், உன்னை விட்டு நான் எங்கே யிருக்கிறேன்? உண்மையாகத் தூங்குகின்றவனை எழுப்ப முடியும்; பொய்யாகத் தூங்குகின்றவனை எழுப்ப முடியுமோ? முடியாது; அதுபோல அருளைப்பற்றி யறியாதவருக்கு அதனை எடுத்துச் சொல்லித்திருத்தலாம் அறிந்தே புறக்கணிக்கின்ற என்னை எப்படித் திருத்தமுடியும்? என் ஊழ்வலி இவ்வாறுள்ளது. ஆயினும், உன்னைவிட எனக்கு வேறு கதியில்லை. என்ன கற்றாலும், கேட்டாலும் என் மனம் அடக்கமுறவில்லை. மன அடக்கத்தைப் பற்றிப் பிறருக்கு நான் நன்றாய்ப் போதிக்கின்றேன். ஆனால், எனக்கு அது வரவில்லை. என்னைப்போலக் குணங்கெட்டோர் உலகில் யாரேனும் உண்டோ? என்றாலும் நீ மௌன குருவாய் வந்து அனுக்கிரகித்த அந்த ஒளனத்தையே நம்பி வாழ்கின்றேன்' என்று இவ்வாறெல்லாம் தம் உணர்வு நிலையைப் புலப்படுத்துகின்றார். அப்பாடல்களை ஓதின் ஆனந்தமான பரமனது அருளை ஐயமின்றிப் பெறலாம்.

சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

(மலர் 26, இதழ் 6, பக்கம் 322 இன் தொடர்ச்சி)

மாணுக்கன்: 'உயிர்களின் சாதி, ஆயு, போகம் என்னும் அனைத்தையும் வினையே தருகின்றது' என்றால், தேவர் முதல் தாவரம் ஈறாக உள்ள பலவற்றையும் உண்டாக்குவதும், அவைகளை இன்பத் துன்பம் பெற்று வாழச் செய்வதும், பின் மடியச் செய்வதும் எல்லாம் வினையே என்றாகின்றது. அங்ஙனமாயின், இறைவன் எதற்கு? 'வினையின் வழியே இறைவன் மேற் சொல்லிய காரியங்களைச் செய்கின்றான்' எனின், வினையே தலைமையானதும், இறைவன் அதன் வழிநின்று செயலாற்றுகின்றவனுமாய் முடியும் அவ்வாறாயின் 'இறைவனே எல்லாவற்றிற்கும் முதல்வன் தலைவன்' என்று முன்பெல்லாம் சொல்லி வந்ததற்கு மாறானதாகும் ஆகவே, இக்குழப்பத்தை எவ்வாறு தவிர்ப்பது?

ஆசிரியர்: இஃது ஒரு பெரிய குழப்பம் அன்று; 'வினை சடம் - அறிவில்லாதது' என்றும், இறைவன் சித்து - அறிவுடையவன்' என்றும் அறிவுடைய பொருள் இல்லாமல் அறிவில்லாத பொருள் செயற்படாது என்றும் நாம் பலமுறையும் சொல்லிவந்துள்ளோம். ஆகவே, வினை, உயிர்களுக்குச் சாதி, ஆயு, போகம் ஆகிய எல்லவற்றையும் தரவல்லதாயினும் அவற்றைத் தானே தரமாட்டாது; ஒருவன் அவற்றைத் தரும் வகையில் செயற்படுத்தவே தருவதாகும். அஃது எது போலும் எனின், எழுத்தாணி பல எழுத்துக்களையும் எழுதவல்லது; ஆயினும், தானே அவ்வெழுத்துக்களை எழுதிவிடாது; ஒருவன் அதைத் தக்கவகையில் பிடித்து எழுதுவிக்கவே எழுதும். மற்றும் பல கருவிகளும் இப்படிப்பட்டவைதாம் உலகில் பற்பல கருவிகள் காணப்படுகின்றன அவற்றுள் ஒவ்வொரு கருவியும் ஒவ்வொரு செயலைச் செய்யவல்லது; ஆயினும் அவைகள் தாமே அச்செயலைச் செய்துவிடமாட்டா; செய்விப்போன் அவற்றைச் செயற்படுத்தவே அவை அவ்வச் செயல்களைச்

செய்யும். அதுபோலத்தான் வினையும் சாதி, ஆயு, போகம் என்பவற்றைத் தானே தரமாட்டாது; இறைவன் அதனைச் செயற்படுத்தவே அவற்றைத் தருவதாகும். எனவே, 'எழுத்தாணி எழுதிற்று' என்றோ அல்லது 'எழுதவில்லை' என்றோ நாம் கூறினால், எழுதுவதற்குக் 'கருவியாய் அமைந்தது, அல்லது 'அமையவில்லை' என்பதுதான் கருத்தேயன்றி வேறில்லாமைபோல, உலக வழக்கிலும், செய்யுள் வழக்கிலும், 'வினை, சாதி, ஆயு, போகங்களைத் தந்தது' என்றோ அல்லது 'தரவில்லை' என்றோ கூறினால், 'இறைவன் உயிர்களுக்கு அவற்றைத் தருதற்கு அது கருவியாய் அமைந்தது' அல்லது 'அமையவில்லை' என்பது தான் கருத்தன்றி வேறில்லை. இதனால், எல்லாவற்றையும் செய்யும் தலைவன் இறைவனும், அவனுக்குக் கருவியாய் அமைவது வினையும் என்பது தெளிவாதலால், 'வினை என்பது இருந்தால் இறைவன் எதற்கு' என்ற ஐயப்பாட்டிற்குக் காரணம் இல்லை. இதனானே, 'வினை எல்லாப் பயன்களையும் தரவல்லதாயினும், இறைவன் அவற்றைத் தருவிக்கவே தரும்' என்பதும் இனிது விளங்கும்.

மாணாக்கன் : 'வினை' என்னும் கருவியில்லாமலே இறைவன் உயிர்கட்கு நன்மை தீமைகளைச் செய்தல்கூடாதோ?

ஆசிரியர் : கூடும். ஆனால், இங்கு, 'நன்மை, தீமை' என்பன இறைவன் தான் செய்யவிரும்பும் நன்மை தீமையல்ல; ஆணவமலத்தால் விளையும் நன்மை தீமைகளேயாம். ஆதலின் அவற்றைத்தானே செய்யாது வினைவழியே செய்வன். இறைவன் செய்ய விரும்புவது நன்மை ஒன்றே. அதனை அவன் தானே செய்வான். இங்கு நன்மை என்பது தீமையை நோக்க ஓரளவில் சிறந்துநிற்றல் பற்றியன்றி, உண்மை நன்மையன்று.

மாணாக்கன் : அங்ஙனமாயின், வினையைக் கருவி என்னாது, 'அதுதானே வந்து பயன்கொடுக்கும்' என்று கூறினால் என்னை?

ஆசிரியர் : வினை அறிவுடையதன்று; அறிவில்லாத சடம் ஆதலின், அஃது எவ்வாறு தன்னைச் செய்தவனை அறிந்து சென்று பற்றும்? மேலும், வினை, என்றோ, எங்கோ ஓர் இடத்தில் ஏதோ ஓர் உடம்புகொண்டு செய்யப்படுகின்றது. செய்யப்பட்ட செயல் அப்பொழுது நிகழ்ந்து அழிந்துவிடுகின்றது; அது பின்னர் என்றாவது, எங்காவது, எந்த உடம்பிலாவது வந்து எப்படிப் பயன் தரும்? அதனால், இறைவனே அவரவர் செய்யும் வினையை நடுவனாய் நின்று கண்டு அவ்வவ்வினைக்குரிய பயனை

உரிய காலத்தில், உரிய இடத்தில், உரிய உடம்பில் கூட்டு விப்பான்.

மாணாக்கன் : இறைவன் அங்ஙனம் நடுநின்று கூட்டுவிக்க வேண்டுவது என்னை ?

ஆசிரியர் : வினையைச் செய்யும் அவ்வுயிர்கள்மேல் உள்ள கருணையே அவன் அங்ஙனம் நடுநின்று கூட்டுவித்தற்குக் காரணம்.

மாணாக்கன் : தீவினையின் பயனாகிய துன்பத்தைக் கூட்டு விப்பதும் கருணையோ ?

ஆசிரியர் : ஆம் ! கருணைதான். அஃது எவ்வாறெனில், தாய் தந்தையர் நல்லொழுக்கத்திலே நடக்கின்ற மக்களுக்கு நல்லன பலவற்றைச் செய்தல்போலவே. அவர்கள் தீயொழுக்கத் தில் செல்லுகின்றபொழுது அதற்குத் தக்க தண்டனையையும் செய்கின்றார்கள், அஃது அவர்கள் மேல்கொண்டுள்ள அன்பினாலா? அவர்களுக்குத் தீங்கு செய்யவேண்டும் என்ற தீய எண்ணத்தினாலா? அவர்களைத் தீய வழியினின்றும் நீக்கி நல் வழியிற் செலுத்தல் வேண்டும் என்னும் அன்பினால்தான் என்ப தில் ஐயமில்லை.

இனிப் பள்ளிகளில் நன்மாணவர்க்குப் பரிசு வழங்குதல் போன்றனவேயன்றித் தவறு செய்யும் மாணவர்கட்கு ஆசிரியர் கள் தண்டனை விதித்தலும், அரசன் தன்கீழ் வாழும் குடிமக்களை நன்கு பாதுகாத்தலேயன்றிக் குற்றம் செய்யுங்கால் அவர்களை, ஒறுத்தலும் அவர்கள்மேல் கொண்ட நல்ல எண்ணத்தினாலல் லது, தீய எண்ணத்தினாலன்று. அதுபோலத்தான், உயிர்களை உய்விக்கக் கருதுகின்ற இறைவனும் அவர்கள் செய்த நல் வினைக்கு ஏற்ற நன்மையைத் தருதலேயன்றித் தீவினைக்கு ஏற்ற தீமையையும் கொடுக்கின்றான். இஃது எவ்வாறு அருளுக்கு மாறான கொடுஞ்செயல் என்று சொல்லப்படும்? மேலும், நல்லனவற்றிற்கு நன்மையை எதிர்பார்க்கின்ற நாம், தீயன வற்றிற்குத் தீமையைமட்டும் கூட்டுவித்தல் கூடாது என்று சொல்வது என்ன முறை? அரசன் குற்றம் செய்பவர்களை ஒறுப்பது அவர்கள் நல்லோர்க்குத் தீமைசெய்தல் பற்றி யன்றோ? அதனால், அது நல்லோர்களைக் காத்தல் வேண்டும் என்னும் கருணையன்றி வேறு என்னை ?

வினையை இறைவன் நடுநின்று ஏற்றுப் பயன் தருதற்குக் காரணம் கருணையே என்பதை வேறொரு வகையிலும் வைத்துக் காணலாம். நாட்டில் கல்வியைக் கற்றுக் கவிபாடவும், அழகிய இனிய நடையில் அரிய பொருள்களை விரித்துரைக்கவும் வல்ல புலவர்கள் இருக்கின்றார்கள். அவர்களைப்போலவே இனிய குரலில் வீணையோடும் தாளவகைகளோடும் இசைந்து பாட வல்ல இசைவல்லுநர் இருக்கின்றார்கள். இவர்களது கவிகளையும், விரிவுரைகளையும், பாட்டுக்களையும் கேட்டுப் பரிசுதரும் வள்ளல்கள் நாட்டில் இல்லையெனின், இவர்களது வாழ்க்கை என்னாகும்? ஆகவே, இவர்களது கவிதை முதலியவற்றை வள்ளல்கள் சிலர் கேட்டு அவரவர்கட்குத் தக்க பரிசிலை வழங்குவார்களாயின், அஃது அவர்கள்மேல் கொள்ளும் கருணையன்றி வேறென்னை? இவ்வாறே இறைவன் நாம் செய்யும் செயல்களைக் கண்டு அச்செயலுக்குப் பயனைத் தாராவிடில், நாம் பயன் பெறுதல் எவ்வாறு? இம்முறையில் நல்லவற்றிற்கு நற்பயன் விளைகின்றபொழுது, தீயவற்றிற்குத் தீயபயனும் விளையத்தான் செய்யும். அது பற்றி இறைவனைக் கருணையாளன் அல்லன் என்றல் பொருந்துமோ? நல்லவற்றிற்கு நற்பயனைமட்டும் தந்து தீயவற்றிற்குத் தீய பயனைத் தாராதொழியின் இறைவன் நடுவுநிலைமையனாகான். அதனால், இறைவனாவான் நற்பயன் மட்டுமே தருதல் வேண்டும் எனக் கூறுதல் பொருந்தாததாம்.

இனி. உண்மையில் வினைப் பயனை இறைவன் உயிர்கட்கு ஊட்டுவித்தற்குக் காரணம் அவைகளைப் பற்றியுள்ள ஆணவ மலத்தைப் போக்குதல் வேண்டும் என்னும் திருவுளக் கருத்தேயாம். உயிர்கள், 'எல்லாவற்றிற்கும் முதல்வன் இறைவனே' என்பதை மறந்து. எல்லாவற்றிற்கும் தாங்களே முதல்வர் என்று எண்ணும் செருக்கினால், செய்யப்படும் செயல்களே, 'வினை' எனப்படுவது. இம் மறதியும், செருக்கும் ஆணவமல மறைப்பினால் வருவன. ஆகவே, 'எல்லாவற்றிற்கும் தாங்களே முதல்வர்' என்று எண்ணிச் செய்யும் செயல்களின் பயனை அவ்வுயிர்கள் தவறாது அனுபவிக்கும்படி ஊட்டுவிக்க, ஊட்டுவிக்க, அப்பயனை நுகரும் உயிர்கள் தமது அறியாமை நீங்கி இறைவனை அறியும் அறிவைப்பெறும். ஆகவே, வினைப்பயனை இறைவன் ஊட்டுவித்தல் மருத்துவன் நோயாளிக்கு மருந்து கொடுத்தல் போன்றதே. ஆணவமலம் உயிர்கட்கு உள்ள நோய். அதற்கு மருந்தாய் உள்ளவை வினைப் பயன்கள். மருந்துகளில் சில இனிக்கும்; சில கசக்கும் இனிப்பான மருந்து நல்வினையின் பயனாகிய இன்பம். கசப்பான மருந்து தீவினையின் பயனாகிய துன்பம். இன்னும் சில வேளைகளில் அறுத்துக் கீறிச்

சுட்டுச் செய்யும் சிகிச்சைகளும் நிகழ்தல்போல, மிகப் பெரிய துன்பங்களையும் மிகப்பெரிய தீவினைக்குப் பயனாக இறைவன் ஊட்டுவிப்பன். எனவே, எவ்வாற்றானும் இறைவன் உயிர்களுக்கு வினைப்பயனை ஊட்டுவித்தல், அவற்றின்மேல் வைத்த கருணையினாலன்றி வேறில்லையாம்.

மாணாக்கன் : நோயாளிக்கு மருந்து கொடுக்கின்ற மருத்துவன், நோய் தீர்ந்த காலத்தில் மருந்தைக் கொடாதுபோவது போல, இறைவனும் வினையை எக்காலத்திலேனும் ஊட்டாது விடுவனோ ?

ஆசிரியர் : ஆம் ! ஆணவமே இங்கு, 'நோய்' என்று சொல்லப்பட்டமையால், அது தீர்ந்த பின்னர், இறைவன் அதற்கு மருந்தாகிய வினையை ஊட்டாது விடுவான். எனவே, உயிர்கள் தாம் செய்த வினை அனைத்தையும் தாம் அனுபவித்துத் தொலைப்பதில்லை. ஆணவமலம் உள்ளவரையுமே அவை தாம் செய்த வினையை அனுபவிக்கும். ஆணவமலம் ஒழிந்தால், அவற்றை அனுபவித்தல் இன்றி அவற்றோடு தம்மிடையுள்ள தொடர்பு அற்றொழியத் தாம் வீடுபெறும்.

மாணாக்கன் : அது நிற்க. முற்பிறப்பில் செய்த வினையைப் பிற்பிறப்பில் அனுபவித்துவிட்டால், அடுத்த பிறப்பிற்குக் காரணமாக வினை ஏது ?

ஆசிரியர் : முற்பிறப்பில் செய்த வினை முழுவதையும் பிற்பிறப்பில் அனுபவித்துவிடுவதில்லை. யாதொரு பிறப்பிலும், செய்யப்படும் வினை மிகுதி ; அனுபவிக்கும் வினை குறைவு. ஆகவே, அனுபவிக்கப்பட்டு எஞ்சிக்கிடக்கும் வினை மிகப்பெரிய அளவில் உள்ளது. ஆகவே, ஒரு பிறப்பில் சில வினைகளை அனுபவித்து விடுவதனால், அடுத்த பிறப்பிற்குக் காரணமாய வினை இல்லாதொழியாது. இதனானே, ஒரு பிறப்பில் அனுபவிக்கப்படும் வினைகள், அதற்கு முந்தைய பிறப்பிற் செய்த வினைகள்தாம் என்பது இல்லை ; எந்துணையோ பிறப்பிற்கு முற்பட்ட பிறப்பிற் செய்த வினைகளாய் இருத்தலும் கூடும் என்பது விளக்கும்.

மாணாக்கன் : அவ்வாறாயினும், மற்றோர் ஐயப்பாடு. ஒரு பிற்பிறப்பில், அதற்கு முற்பட்ட பிறப்புக்களில் செய்த வினைகளை அனுபவித்தல்தானே நிகழ்கின்றது ; அந்நிகழ்ச்சிக்கிடையில் புதியனவாகச் சில வினைகளைச் செய்தல் எவ்வாறு ?

ஆசிரியர்: ஒரு வினையை அனுபவிக்கும் அனுபவம், எவை யேனும் சில முயற்சியின்றி நிகழாது. உதாரணமாக, ஒருவனுக்கு அவன் செல்லும் வழியில் பொன்முடிப்புக் கிடைக்குமாயின், அவன் அதனைத் தன் கையால் எடுத்தல் பின்னர்ப் பிறர் காணுமல் மறைத்தல், தன் இல்லத்திற் கொண்டுபோய்ச் சேர்த்தல், நன்கு பாதுகாத்தல், சிறிதுசிறிதாக எடுத்துச் செலவு செய்தல் முதலாகச் சில முயற்சிகள் நிகழ்ந்தாலன்றி, அப்பொன் முடிப்பினுல் அடைதற்குரிய அனுபவத்தை அவன் அடைதல் இயலாது; அப்படியே ஒவ்வோர் அனுபவத்திலும் வைத்துப் பார்த்துக் கொள்ளலாம். ஆகவே, முன்செய்த வினை, பிராரத்துவமாய் வந்து பயன்தரும் பொழுது, அதற்கேற்ற சில முயற்சிகளும், அப்பயனை அனுபவிப்பவனிடத்தில் இன்றியமையாது நிகழும் அம்முயற்சியே 'ஆகாமியம்' என்னும் வினையாகும். எனவே, பிராரத்துவத்தின் அழிவில் ஆகாமியம் தோன்றியேவிடும். அதனுல், 'வினை, நாசோற்பத்தியாம்' என்றுகூறுவர். 'நாசோற்பத்தி' என்பது, ஒருவினை நாசமாகும்பொழுது, வேறு வினைகள் தோன்றுதல். இம்முறையால், வினை, இடையருத சங்கிலித் தொடர்போல முடிவின்றி வந்துகொண்டேயிருத்தற்குரியதாதல் அறிக.

வினை, நாசத்தில் உற்பத்தியாய்த் தொடர்ந்து வருதற்கு, ஓர் உழவன் செய்த பயிர், தன் பயனைக் கொடுக்குங் காலத்தில் அவனுக்கு உணவாய்ப் பயன்படுதலேயன்றி, அடுத்த ஆண்டிற்கு விதையாகவும் அமைதலை உவமையாகக் கூறுவர்,

" மேலைக்கு வித்து மாகி
விளைந்தவை பயனு மாகி
ஞாலத்து வருமா போல
நாம்செயும் வினைக ளெல்லாம்
ஏலத்தான் பலமாச் செய்யும்
இதம்அகி தங்கட் கெல்லாம்
மூலத்த தாகி என்றும்
வந்திடும் முறைமை யோடே "

(சிவஞான சித்தி. சூ. 2-12).

என்பது காண்க.

மாணுக்கன்: வினை இவ்வாறு நாசோற்பத்தி பண்ணி வருமாயின், உயிர் வினையினின்றும் நீங்குதற்கு வழியே இல்லையன்றோ? ஏனெனில், பிராரத்தவினை இல்லாமல் பிறப்பு வாராது. பிராரத்தத்தால் பிறப்புவந்தால், அதை ஆகாமியம்

இல்லாமல் அனுபவிக்க இயலாது. ஆகவே, அடிகள் முன்னர்க் கூறியவாறு, வினைத் தொடர்பினின்றும் உயிர் நீங்கும் என்பது எங்ஙனம் கூடும்?

ஆசிரியர்: சிறந்த ஒரு வினாவைத்தான் வினவுகின்றாய். ஆகாமியம் இல்லாமல் பிராரத்தத்தை அனுபவித்தல் இயலாது என்பது உண்மையே. ஆயினும், அஃது இன்றியும் பிராரத்தத்தை அனுபவித்தல் கூடும். அஃது எங்ஙனம் எனில், பிராரத்தத்தை அனுபவித்தற்பொருட்டு நிகழும் முயற்சி, விருப்பு வெறுப்புக்களோடு கூடி நிகழும்பொழுதே 'ஆகாமியம்' எனப் பெயர்பெற்று, அடுத்த பிறப்பிற்கு வித்தாய் அமையும். இல்லையேல் அவ்வாறு ஆகாமியமாதல் இல்லை,

இதனை இன்னும் சிறிது விளக்கமாகக் கூறினால், பின் வருமாறு கூறலாம். 'பிராரத்த வினை நன்மையையோ தீமையையோ தரும்பொழுது, தானே நேரில்வந்து தருவதில்லை; ஆதியான்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் என்னும் மூவகை வாயிலாகவே பயன் தரும்' என்று முன்பு சொன்னோம். அங்ஙனம் தரும்பொழுது, அந்நன்மை தீமைகளை முற்பிறப்பில் நாம் செய்த வினையின் பயன்களே இவை என்றும், அவ்வினைகள் தம் பயனைத் தருதற்கு வாயிலாகக் கொண்டவைகளே இம் முன்னிலைப் பொருள்கள் என்றும் உணராமல், அப்பயன்கள் அப்பொழுதுதான் புதியனவாய் வருதல்போல நினைத்து, தன்னையும் பிறரையுமே அந்நன்மை தீமைகளுக்குக் காரணர்களாக வைத்து விருப்பு வெறுப்புக்கள் கொண்டு, நட்பாதல், பகைமையாதல் பாராட்டும் முறையில் முயற்சிகள் நிகழுமாயின், அவை, 'ஆகாமியம்' என்னும் வினையாய், மேலும் மேலும் வரும் பிறவிகட்கு வித்தாம். அவ்வாறின்றி, 'இவை நாம் முன்செய்த வினையால் வரும் பயன்கள்; இவற்றிற்கு முன்னிலையாய் நிற்பவர்கள், அவ்வினைப்பயன் விளைதற்கும் வாயிலாகின்ற அத்துணையேயல்லது, இவர்களால் வருவதொன்றில்லை. நாம் செய்த வினையை நாம் அனுபவித்துத்தானே ஆகவேண்டும் என்று எந்த விருப்பும் இன்றி வெறுப்பும் இன்றி அமைந்து நடப்பின் 'பிராரத்துவம்' உயிரைத்தாக்காது. உடலளவாய்க் கழியும், அந்நிலையில் வினை நாசோற்பத்தியாதல் இல்லை. ஆகவே உயிர்கட்கு இவ்வாற்றால் நாம் முன் சொன்னபடி வினைத் தொடர்பு நீங்குதலும் உண்டு என்று அறிவாயாக.

(தொடரும்).

ஞானப்பூ!

-: வேலன் :-

முதலும் முடிவும் இல்லாமல் — ஒளி
முடுகும் பெருமை கலவாமல்
இதழும் மணமும் விரவாமல் — அது
இங்கே பூத்த நறுமலராம்! (1)

ஞானப் பெயரின் மலர்ந்ததுவாம்! — அது
நன்மைச் செடியின் மலர்ந்ததுவாம்!
ஊனத் திருளைக் கெடவேண்டி — அது
உள்ளத்துள்ளே இளர்ந்ததுவாம்! (2)

பொய்ம்மைப் பேயைப் புறங்காண, — ஒளி
பூக்கும் வாய்மை மணம்விரிய,
மெய்ம்மை காக்கும் என்னையன் — மண
மேவிச் செழித்த வானப்பூ! (3)

சூடக்கிடைத்த மாமலராம்! — ஒளி
துன்றும் அருளார் தேமலராம்!
பாடக் கிடைத்த புதையலடி! — ஒளி
பாவம் கழுவும் உதயமடி! (4)

பத்திக் கொடியில் பூத்ததடி! — மனப்
பண்பில் நிலையில் பூத்ததடி!
முத்திக் கரைக்கே யீர்க்குமடி! — அது
மோனம் விளைத்த ஞானமடி! (5)

சத்தியமென்னும் நிழலினிலே — உயர்
சாந்தமென்னும் வெளிநடுவே
நித்திய மான ஒளிபடரும் — அது
நினைவின் தெளிவாம் ஞானப்பூ! (6)

தையல்நாயகி அந்தாதி

[மூலமும் உரையும்]

உரை :- தருமையாதீனப்புலவர், பண்டித, வித்துவான்,

திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை

(மலர் 26, இதழ் 5. பக்கம் 298 இன் தொடர்ச்சி)

தானஞ்செய் தாலென் றவம்புரிந் தாலென்ன தந்துணர்ந்தென்
வானம் பரவிய வேளூர்த் தயிலம்மை வண்கழற்சீர்
மான முறநிதம் ஏத்தா தவர்பயன் மன்னுவரோ!
ஞான மருவிய நாவல ரோதுமி னன்குறவே'' 72

(இ - ள்) வானம் பரவிய வேளூர் தயிலம்மை வண் கழல் சீர் மானம் உற நிதம் ஏத்தாதவர் பயன் மன்னுவர் ஓ - விண்ணளவும் சென்று பரந்த (பெரும் புகழினை யுடைய) புள்ளிருக்கு வேளூர் என்னும் புண்ணியப் பதியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ள தயிலம்மை யாகிய தாயின் வளவிய திருவடிப் புகழினை அளவு மிக நாடோறும் வாயார வாழ்த்தித் துதியாதவர் அறம் பொருள இன்பு வீடு என்னும் நாற்பொருளை நிலைபெறப் பெறுவரோ? (பெற மாட்டார்கள் என்றபடி) ஞானம் மருவிய நாவலர்! சிவஞானம் பொருந்தப் பெற்ற பெருநாவலராகிய புலவர்களே! நீவிர் ஓதுமின்- நீங்கள் கூறுங்கள். நன்கு உற ஏ - நன்றாகவே யுணர்ந்திட்டு. தானம் செய்தால் என்? - தான் தேடிய பொருளை வந்திரந்தவர்கட்கு வாரி வழங்கினால் என்னை? தவம் புரிந்தால் என்ன - செயற்கரிய நோன்புகளை நோற்றதனால் வரும் பயன் யாது? தந்து உணர்ந்து (ஆல்) என் - நல்ல நூலாகிய கலைகளை ஓதி யுணர்ந்ததனால் வரும் பயன் யாது? ஒன்றுமில்லை (எ - று).

தயிலம்மையாரின் திருவடி பராவினர்க்கே பயன் உண்டாகுமன்றி ஏனைச் செயல்களால் பயன் கிட்டாதென்றவாறும்.

(கு - ரை) தந்து - நூல்கள் (முதனூலும் வழிநூலும் ஆகியவை) வானம் - விண்ணுலகு. நித்தம் - நிதம் என இடைக்குறை. மன்னுதல் - நிலைபெறல். பரவின, மருவின. என்பன மருவிய பரவிய என வந்தன. தந்துணர்ந்து ஆல், தந்து உணர்ந்தால் என நிற்கற்பாலது தந்துணர்ந்து எனவாயது.

நல்லவர் கூறிய சொல்லைநஞ் சாக்கொண்டு நாணிலியாப்
புல்லறி வால்விட யாதிய துன்னெறிப் போந்துநின்றே
யல்ல லுழன்றுன் றிருநோக் குணர்த்த வரிலொழிந்தே
வல்லவ னுய்ந்துதித் தேன்றயிலம்மை வரம் புரியே. 73

(இ - ள்) நல்லவர் கூறிய சொல்லை - அறனறிந்து மூத்த அறிவுடையராகிய பெரியோர்கள் சொல்லிய அறமொழிகளை. நஞ்சு ஆ(க) கொண்டு - விடமாகவே எண்ணிக்கொண்டு. நாண் இல்லி ஆ(க) - நாணமுறறற்று நாணமில்லாதவனாக. புல் அறிவு ஆல் - தாழ்ந்த மதியினால். விடயம் ஆதி துன்நெறி போந்து - மனத்தினை பொறிகள் வழி புலன்களிடத்துச் செல்லுதலாகிய, கெட்டவழியிற் போய். நின்றேன் - அதன்மாட்டுறு செயலில் நிலைத்து, அல்லல் உழன்று - துன்பினிற் கிடந்து வருந்தி உன் திருநோக்கு உணர்த்த அரில் ஒழிந்து ஏ - தேவரீருடைய கருணைப் பார்வையால் ஞான மார்க்கத்தை யடையுமாறு செய்ய, பிறவிக் குற்றம் நீங்கி. வல்லவனாய் - போற்றலுற்றவனாய் துதித்தேன் - தோத்திரம் புரிந்துளேன். தயிலம்மை - தைய லுயகியாகிய தாயே. வரம் புரி ஏ - வரத்தைக் கொடுத்து ஈடேற்றியருளுவிராக (எ - று),

(கு - ரை) அரில் - பிணக்கு (குற்றம்). புல் அறிவு - இழிந்த உணர்வு. அல்லல் - துன்பம். உழலல் - வருந்தல். ஆன்மாக்கள் திருவருள் உணர்த்த உணர்பவை தாமாக உணரும் பெற்றிமையற்றவை. வல்லவன் - ஆற்றலுற்றவன். விடயம் - சுவையொளி யூறு ஓசை நாற்றமென்பன. திரு நோக்கு - அருட்பார்வை. நின்று, ஏ. ஈண்டு ஏகாரம் தேற்றம். புரி ஏ. இங்கு ஏகாரம் ஈற்றசை.

வரமுனை நம்பியான் கேட்பதொன் றுண்டு மரித்திடுங்கால்
மரண வவத்தையில் லரமன்று வாசையின் வாஞ்சையின்றிச்
சிரகரங் கூப்பியுன் பஞ்ச தசாக்கரஞ் சிந்தை யுள்ளே
வரவு மநுக்கிர கஞ்செய் தயிலம்மை வந்தென் முன்னே. 74

(இ - ள்) தயிலம்மை - தயிலம்மையாகிய தாயே! யான் உன்னை நம்பி, வரம் கேட்பது ஒன்று உண்டு - அடியனேன் தேவரீரை யுறுதியாக நம்பி வரம் கேட்டல் ஒன்று உள்ளது (அவ் வரமானது என்னை யெனில்) மரித்திடுங்கால் - அடிய னேன் உடலினை விட்டு உயிர் நீங்கும்போது, மரணம்

அவத்தை இல்லாமல் - இறக்குந் துன்பம் இன்றி. மூன்று ஆசை இல் வாஞ்சை இன்றி - மண் பெண் பொன் ஆயவற்றில் வைக்கப் பட்டுள்ள பெருவிருப்பில்லாமல். சிரம் கரம் கூப்பி - தலைமிசை கைகளைக் குவித்து. உன் பஞ்ச தச சக்கரம் - தேவரீர் வடிவா யுள்ள பஞ்சதசாட்சரம் என்னும் மந்திரத்தை. சிந்தை உள் ஏ வரவும் - மனத்திடத்துத் தோன்றி நிலைபெறவும், என் முன் ஏ வந்து - ஏழையேன் முன்னே எழுந்தருளிவந்து. அநுக்கிரகம் செய் - அருள்புரிவாயாக (எ - று).

(கு - ரை) அவத்தை - துன்பம். மூன்று ஆசை - மூவாசை. வாஞ்சை - ஆசை. (விருப்பம்). மரித்தல் - இறத்தல். பஞ்ச தசாக்கரம் முன்னரும் வந்துள்ளது காண்க. அநுக்கிரகம் - அருள் (கருணை).

முன்னைப் பிறவியி லெக்குறை செய்தேனோ மொய்யுலகிற்
பின்னைப் பிறவியிங் கெய்துறு மோவுணர் பெற்றறியேன்
மன்னிப் பிறப்பி லடைதுயர் போது மனமிரங்கி
யுன்னிரு தாணிழற் சேர்ப்பாய் தயிலம்மை யோதினனே. 75

(இ - ள்) தயிலம்மை - (வைத்தீச்சுரன்கோயில் என்னுந் திருப்பதியில் எழுந்தருளிய) தயிலம்மையாகிய தாயே! (அடிய னேன்) முன் எ பிறவியில் எ குறை செய்தேன் ஓ - முன் சென் மாந்தரத்தின்கண் எவ்வெவ்விதமான தீவினையாகிய குறைபாடு களைச் செய்திட்டேனோ. மொய் உலகில் பின் எ பிறவி இங்கு எய்துறும் ஓ - நெருங்கிய மண்ணுலகின்கண் பிறகு எந்தப் பிறப்பு இங்கு வந்தடையுமோ? உணர் பெற்று அறியேன். இவற்றினை யுணர்தலையுற்று அறியகில்லேன். மன் இ பிறப்பில் அடை துயர் போதும் - நிலைத்த இந்தப் பிறப்பின்கண் பட்ட துன்பம் போதுமானது (இனி வேண்டா என்றபடி). மனம் இரங்கி உன் இரு தாள் நிழல் சேர்ப்பாய் ஓதினன் ஏ - திருவுளங் கசிந்து தேவரீருடைய இரு திருவடி நிழலின்கண் சேர்த்தருளு வாய் வேண்டிக் கூறினேன் (ஏற்றருள்வாயாக) (எ - று).

(கு - ரை) மொய் உலகு - இயங்கியற் பொருளும் நிலை யியற் பொருளும் ஆகிய சராசரப் பொருள் நெருங்கிய உலகு. உணர்வு பெற்றறியேன் என்றபாலது உணர்பெற்றறியேன் என வந்துளது. ஓதுதல் - பிரதிஞ்ஞை செய்துகொண்டு இடை விடாது இயம்புதல். ஓகாரம் வினாப் பொருட்டு. ஐயமுமாம். ஏகாரம் - அசைநிலை. செய்தேன் - தன்மை யொருமை வினை முற்று.

ஓதின னாதி நடுவீ றிலிநிக ழொப்பி லியாய்!
நீதிய தாகி யகில சராசர நின்றுலவு
சோதியு மாயுறை கின்றவ ளென்றுனைச் சுந்தரியே!
யேதினை நீயிரங் காய்தைய னாயகி யீன்றவளே. 78

(இ - ள்) ஆதி நடுவு. ஈறு இ(ல்)லி நிகழ் ஒப்பிலியாய் - முதலும் நடுவும் முடிவும் இல்லாமலும்! நிகழ்கின்ற ஒப்பில்லாமலும். நீதியது ஆகி - நேர்மையான நெறியுமாகியும், அகில சர அசரம் நின்று உலவு சோதியும் ஆய் - எல்லா நிலையியற் பொருளும் இயங்கியற்பொருளும் ஆகிய அறுவகையறிவுயிர்ப்பொருளுமாகி நிலைபெற்று உலாவுகின்ற பிரகாசமாகியும், உறைகின்றவள் - சென்று தங்கும் இறைவியாகுவள். என்று - என்று கூறி. சுந்தரி ஏ - பேரழகுடைய தெய்வமே. உ(ன்)னை ஓதினன் - தேவரீரை யோதுதலைச் செய்தேன். தையல் நாயகி ஈன்றவள் ஏ - உலகமீன்ற ஒரு பெருமாட்டியாகிய தையல்நாயகித்தாயே, நீ தேவரீர் இ(ன்)னம் ஏது இரங்காய் - இனிமேலும் யாது காரணம். திருவுளம் இரங்கிய குறைவில்லை (எ - று).

(கு - ரை) நடு - இடை. ஈறு - கடை. ஆதி - முதல். இல்லி இடைக்குறையாய் இலியென வந்தது. சரம் - இயங்குவது. அசரம் - இயங்காதது. நிலையியற் பொருள் (தாவரம் சங்கமம்) இனம் - (இன்னம்) இடைக்குறை. உறைதல் - சென்று தங்குதல் (எ - று).

(தொடரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

Emotional integration always stands as the bedrock of a calm and serene atmosphere; besides there should be the air of clean 'air halo" round. All these are found in this temple of importance where god and goddess Vaithiswarar are and which is distinguishably and ably managed by Dharmapuram Adhinam.

(S-d.) RAMAPRASAD RAO.

28—5—67 Judge, Madras High Court.

பாணன் படும் பாடு

வித்துவான். திருமதி. ப. நீலா

இல்லறமே இனிய அறம் என்பர் மேலோர். அந்த இல்லறமும், அன்புடைய மனைவியால் சிறப்புப்பெறும். 'மனைக்கு விளக்கம் மடவார்' - என்பது பழைய பாடல். காதல்மிகு மனைவியும் கணவனும் கருத்தொருமித்து நடத்தும் மனை வாழ்வில் இடை இடையே சிறுசிறு பூசல்களும் எழும். அதனை ஆன்றோர் ஊடல் என்பர். அக்கோபம் உணவிற்கு உப்புப்போல இன்றியமையாதது ஆகும்.

" உப்பமைந் தற்றாற் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல் " —வள்ளுவம்.

இத்தகைய கோபம் தலைவியிடம் எழும்போது விருந்தினர்களும்' பாணன், கூத்தர் போன்றோர்களும் கோபம் நீக்கும் வாயில் களாக அமைவர்.

" கொளைவல் பாணன் பாடினி கூத்தர்
இளையர் கண்டோர் இருவகைப் பாங்கர்
பாகன் பாங்கி செவிலி அறிவர்
காமக் கிழத்தி காதற் புதல்வன்
விருந்தாற் றாமை யென்றிவை ஊடல்
மருந்தாய்த் தீர்க்கும் வாயில்கள் ஆகும் "

என்று ஊடல் தவிர்ப்போர் இவரிவர் என்று பட்டியல் தருகிறார் நாற்கவிராச நம்பி.

தலைவிக்கு அடங்காக் கோபம். தலைவனோ பரத்தையிற் பிரிந்து வீடுவருகிறான். வந்தால் வரவேற்பு சரியான முறையில்

இருக்காதென்பது நன்கு தெரிந்தவன் அல்லவா! ஆகவே முதலில் தன் பாணன் ஒருவனை அனுப்புகிறான். தலைவிக்கா தலைவனைப் புரியாது! அவள் சொல்லுகிறாள்.

திருடன் ஒருவன் சுவற்றைத் துளைசெய்தவுடனே தன் தலையை நுழைக்காமல் - ஒருபானையை நுழைத்து உளவு பார்ப்பதுபோல் தலைவனும் பாணனை-பொய்த் தலையாகப் பாவித்து நிலையறியச் சொல்லுகிறான்-என்று கூறுகிறாள்.

ஒருநாள் வீட்டு வாயிலில் தலைவி நின்றுகொண்டிருக்கிறாள். தெருவில் யாழ்மீட்டிக் கொண்டு பாணன்வெகுஉற்சாகத்தோடு வருகிறான். அவனுடைய வேலையெல்லாம் பரத்தையரோடு தலைவனைச் சேர்த்து வைப்பது தான். இதனால் அந்தப் பாணனைக் காணும் போதெல்லாம் தலைவிக்கு மிகுந்த வருத்தமும் கோபமும் எழும். இன்றோ அதற்கு மாறான ஒரு உணர்வை யடைந்தாள் தலைவி. தெருவில் வந்துகொண்டிருந்த பாணன் பின்னே - கன்றை அணிமையிலே ஈன்ற பசு ஒன்று துரத்த - மிகக் கலக்கமுற்ற அவன் தன் கையிலிருந்த யாழினையும் கீழே போட்டுவிட்டு தலைவியின் வீட்டினுள் தஞ்சமென ஓடிவந்தான்.

தலைவிக்கோ அடக்கமுடியாத சிரிப்பு வருகிறது அவனது நிலைகண்டு. அந்நேரத்திலும் அவன்பால்கொண்ட கோபம் மட்டும் மாறவில்லை. உடனே-பாணனே நீ வழக்கமாக என் தலைவனைக் கூட்டிச்செல்லும் மனை இதுவல்ல-அதுவாகும் என்று வேறோர் இடத்தைச் சுட்டிக் கூறினாள். பாணனுக்கு என்ன செய்வது என்று விளங்கவில்லை. மயங்கிய நிலையில் என்னையும் தன்னையும் பார்த்து என்னைத் தொழுது நின்றான்-என்று இந்தக் காட்சியைத் தோழிக்கு விரித்துக் கூறுகிறாள் தலைவி. (நகையாகின்றே தோழி - என்ற அகப்பாடல்)

நந்திக் கலம்பகத்தில் ஒரு காட்சி உண்டு. பாணனிடம் வெறுப்புக்கொண்ட தலைவி-அவனை எதிர்ப்பட்டபோது கூறுகிறாள்.

பாணனே! நேற்று விடியும்வரை நீ எங்கையர்தம் (பரத்தையர்) வீட்டில் உட்கார்ந்து பாடிக்கொண்டிருந்தாய்

அல்லவா? என் அன்னைமார்கள் காட்டிலே பேய் அழுகிறது என்றார்கள். மற்றும் சிலர் நரியன்றோ அழுகிறது என்றார்கள். எனது தோழி இது நாயின் குரலல்லவோ என்றாள். நான்தான் இக்குரல் பேய் - நரி - நாய் இவைகளுக்குச் சொந்தமானதல்ல. நீதான் பாடுகிறாய் என்று விளக்கிச் சொன்னேன்-என்றாள்.

எப்படி இருக்கிறது தலைவியின் பேச்சு,

" ஈட்டுபுகழ் நந்தி பாண எங்கையர்தம்
வீட்டிருந்து பாட விடவளவும்—காட்டிலழும்
பேயென்றாள் அன்னை பிறர் நரி என்றார் தோழி
நாயென்றாள் நீ என்றேன் நான் "

பாணன் படும்பாடு எப்படி இருக்கிறது பாருங்கள்.

குமரகுருபரன் — ஆண்டுச் சந்தா 3 — 00 —

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.
T. M. குமரகுருபரன் பிள்ளை B. A. B. L., அவர்கள்,
" குமரகுருபரன் " ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

திருத்தக்க தேவரின் உவமைநயம்

திரு. மு. வை. அரவிந்தன் எம். ஏ. எல்,

புலவர் தம் புலமைத் திறனை வெளிப்படுத்தும் பலவகை வாயில்களுள், உவமையும் ஒன்று. புலவர் ஒருவர் எடுத்தாளும் உவமை, அவர் புலமையை அளந்து அறிவதற்குச் சிறந்த அளவுகோலாய் உள்ளது. உவமையே பல்வேறு அணிகளுக்கும் தாயாய் உள்ளது.

சீவகசிந்தாமணியில் கற்போர் நினைவை விட்டு அகலாத உவமைகள் பல உண்டு. திருத்தக்க தேவரின் புலமைத் திறனை வெளிப்படுத்தும் அரிய உவமைகள் பல உண்டு, பேசும் மாந்தரின் உள்ளப் பாங்கினை அறிந்து தேவர் அமைத்த உவமைகள் உண்டு. உவமை தேடிப் புகுவார்க்குச் சிந்தாமணி சுடர் மணிக் களஞ்சியமாகக் காட்சி தரும்.

எளிய உவமைகள் : பெருங் குகைகளில் உறங்கும் மலைப் பாம்புகளுக்குப் பனை மரத்தை உவமை கூறுகின்றார். 'பனை மடிந்தனையன பாந்தள் கண்படுப்பன' (1900) என்று தேவர் கூறி, அவற்றின் வடிவத்தையும் நிறத்தையும் நன்கு விளக்குகின்றார். மையுண்ட கண்ணிலிருந்து விழும் கண்ணீர்த் துளிகளுக்குத் தாமரை மலரிலிருந்து விழும் கருமுத்துக்களை உவமையாகக் கூறுகின்றார் (2508). 'கமுகின் மேல் விரிந்த பாளை' 'நிரை கதிர் நித்திலங்கோத்து வைத்தபோல்' உள்ளன என்கின்றார் (99). 'புலிக் கண்போலச் சிவந்து உருண்டு,' கொழுஞ் சுவைக் கருணைக் கிழங்கு உள்ளது என்றும், முனை முறியா நலவரிசிச் சோறு முல்லை முகை போலவும், கொக்கின் உகிர்போலவும் உள்ளன என்கின்றார் (2972). எண்வகையான மலர்களைக்கூறி (1650 51) அவற்றின் வடிவத்திற்கு ஏற்ற பொருள்களை உவமைகளாகக் கூறும் தேவரின் உற்றுநோக்கும் திறன் வியப்பளிக்கின்றது.

குயவன் செயல்; போர்க்களத்தில் திரியும் தேவதத்தனின் குதிரை, முறுக்கிவிட்ட குயமகன் திகிரிபோலத் திரிந்ததாய்க் கூறுகின்றார். (786) வேறு ஓர் இடத்தில் குயவனின் செயல் உவமையாக வந்துள்ளது. தக்க காலம் வந்ததும் சச்சந்தனைக் கொன்று அரசைக் கைப்பற்றிய கட்டியங்காரன் 'வனைகலக்குயவன் நாண்போல'ச் செயல்பட்டதாகக் கூறுகின்றார். (2614). இக்கருத்தையே 'மட்பகை மானத்தெறும்' - என்ற குறளுக்கு விளக்கமாக எழுதுகின்றார் பரிமேலழகர்.

இல்பொருள் உவமைகளும் சிந்தாமணியில் உண்டு. வெண்ணெய்க் குன்றம் எரியுண்பதையும் (1597). உப்புக் குன்றம் புனற்கு உடைதலையும் (813) தேவர் உவமைகளாகக் கூறுகின்றார்.

விழுப்புண்; போரில் புண்பட்ட வீரர்களின் தோற்றத்தைப் பாடுவதில் தேவர் வல்லவராய் விளங்குகின்றார். 'மூது மரப்பொந்துபோல மூழ் மெ(ய்)யும் புண்கள்' (819) என்றும். 'இறைச்சி கொத்தும் பட்டடை மரம்போல' (ஊன் அமர் குறடு போல)ப் போர்க்கருவிகள் பட்டு வடு உண்டாகிய மார்பு (2281) என்றும் அவர் பாடுகின்றார்.

வீரன், தன்மேல் வந்த வேலாகிய விருந்தை மகிழ்ந்து எதிர்கொண்டு தன் மார்பை அதற்கு உணவாகத் தந்தான் என்றும் (2289). அவன் மார்பு (விருந்தினர்) உண்டு மிகுத்த மிச்சில் (2281, 1790) என்றும் பாடுகின்றார்.

'வில் பழுத்து உமிழ்ந்த வெய்ய வெந்நுனைப் பகழி' (435) என்று சுவைபடக் கூறுகின்றார். இங்கே. உவமை உருவகமாகி, அதுவும் குறுகிக் குறுகி குறிப்பு உருவகமாகி இரண்டொரு சொல்லில் மறைந்து கிடக்கிறது.

உவமைப் பொருத்தம்; திருத்தக்க தேவர் தாம் படைக்கும் காப்பிய மாந்தர் பண்பு, பழக்க வழக்கம், அறிவு ஆகியவற்றிற்கேற்ற உவமைகளையே அவர்தம் பேச்சில் அமைக்கின்றார், இம் மரபு தமிழுக்குப் புதிதன்று. தொல்காப்பியர் உவமையியலில்,

கிழவி சொல்லின் அவள்அறி கிளவி (26)
தோழிக்கு ஆயின் நிலம் பெயர்ந்து உரையாது (27)
கிழவோற்கு ஆயின் உரனொடு கிளக்கும் (28)

என்று குறிப்பிட்டுள்ளார். தேவர் தொல்காப்பிய நெறியி லிருந்து மேலும் மேலும் சென்று சிறந்த நெறி ஒன்றைக் கண்டு போற்றி உவமை அமைத்துள்ளார். பேசுகின்ற மக்கள் யாராய் இருப்பினும் அவர்களுக்கு ஏற்ற உவமைகளைக் கூறுகின்றார்.

சீவக சிந்தாமணியில் ஆயர் பேசும் பேச்சில் அமைந்துள்ள உவமைகள் யாவும் அவர்கள் அறிந்த-கண்டு பழகிய பொருள் களாகவே உள்ளன, அவர்களுடைய தொழிலும், பண்பும் அறிவுநிலையும் அவர்கள் கூறும் உவமைகளின் வாயிலாக வெளிப் ப்படுகின்றன. அவர்கள் வாயிலாக அன்றித்தாமே உவமை கூறும்போதும் தேவர் இந்நெறியைக் கைவிடவில்லை. அம் மக்களை நினைந்து நினைந்து தாமும் அவர்களாகவே மாறு கின்றார்.

புள் நிமித்தங்களை ஆராய்ந்து ஆயர்களுக்குக் கூறும் வள்ளுவனை ஆதீண்டு குற்றி (பசு தன் தினவைப்போக்கஉராய் வதற்காக நட்ட தூண்) போன்றவன் என்கின்றார். (ஆய்த்தியர் நலக்கு ஆசெல் தூண் அ(ன்)னான்-419). பசுக்களைக்கவர்ந்த வேடர்களுக்கு முன் நில்லாது ஓடிய ஆயர், 'மத்து எறி தயிரின் ஆயினார்' (421) என்று குறிப்பிடுகின்றார். ஆயர்களுக்கு ஏற்ற உவமை கூறிய தேவர் ஆயர் பேச்சில் அவர்களுக்கு ஏற்ற உவமைகளை அமைக்கின்றார்.

நந்தகோன் தன்மகள் கோவிந்தையின் சிறப்பைச் சீவக னுக்குக் கூறும்போது,

வெண்ணெய் போன்று ஊறு இனியள்
மேம் பால் போல் தீஞ்சொல்லள்
உண்ண உருக்கிய ஆன் நெய் போல் மேனியள் (480)

என்று தான் அறிந்த பொருள்களையே உவமையாகக் கூறு கின்றான்.

கோவிந்தைக்குத் திருமணம் நிகழ்கையில் ஆய்ச்சியர் "'பசுவும் தொழுவும் போன்று ஊழிதோறும் நீயும் நின் கணவனும் சேர மூப்பீராக", என்று மணமக்களை வாழ்த்துகின்றனர்' (ஊழி தொறு ஆவும் தோழும் போன்று உடன் மூக்க!" (486). இடைமகளுக்கு, இடைச்சியர், கூறும் பொருத்தமான வாழ்த்து இது.

வேறோர் இடத்திலும் இத்தகைய பொருத்தமான உவமைகள் சிந்தாமணியில் இடம் பெற்றுள்ளன. காட்டில் சீவகன் சந்திக்கும் வேடனை 'வாழ்மயிர்க் கரடி ஒப்பான்' என்றும் 'மேழகக் குரலினான்' என்றும் கூறுகின்றார் தேவர். விலங்குகளோடு பழகிப் பழகி, விலங்குகளை எண்ணி எண்ணி, விலங்குகளைக் கொன்று தின்று வாழும் வேடன் விலங்காகவே ஆகிவிட்டான். வேடனை நினைக்கும் தேவர், வேடனாகவே மாறி விலங்குகளையே உவமை கூறுகின்றார்.

சிறந்த உவமைகள் : தமிழிலக்கியத்தில் இமயம் போன்று உயர்ந்து விளங்கும் சிறந்த உவமைகள் பல, சிந்தாமணியுள் இடம் பெற்றுள்ளன. பல நூல்களைக் கற்ற பின்னரும அந்த உவமைகள் நம் நினைவைவிட்டு அகலாமல் நிற்கின்றன. அவை யாவும் தேவரின் அரிய படைப்புகள். அவை பிறரிடமிருந்து கடன் வாங்கியவையோ, வேறொருவர் கருத்தை வாங்கி மாற்றி அமைத்தவையோ அல்ல.

ஏரில் பூட்டப்பெற்ற, உழுதொழிலில் ஈடுபட்டுள்ள எருமைகள் இரண்டும் 'மாமனும் மருமகனும் போலும் அன்பின் (43) என்று தேவர் கூறுகின்றார். கணவன் மனைவி போலவும் அண்ணன் தம்பி போலவும் அன்பினை என்றும் உவமை கூறியிருக்கலாம். ஆனால் தேவர் கூறினாரா ? ஆண் எருமைகள் (கடா) இரண்டிற்குக் கணவனையும் மனைவியையும் - அதாவது ஆணையும் பெண்ணையும் உவமை கூறுவது பொருந்துமா ? மேலும் மனக் கசப்பு இல்லாமல் வாழும் அண்ணனும் தம்பிகள் மிகச் சிலர். எனவே 'மாமனும் மருகனும் போல்' (43) என்று தேவர் உவமை கூறினார்.

சொல்லரும் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல் - என்று தொடங்கும் பாடலில் (53) இடம் பெற்றுள்ள மூன்று உவமைகளும் எண்ணி எண்ணி மகிழத்தக்கவை.

முனிவருடைய தவப்பயன் போலே செல்வம் ஓங்கிய நகரம் என்று இராசமாபுரத்தைக் குறிக்கின்றார்.

" பெண்வலைப் படாதவர் பீடின் ஓங்கிய
அண்ணலங் கடிநகர் " (78)

இவ்வுவமை தேவரின் திருவுள்ளத்தை இனிது விளக்குகின்றது.

சீவகனைப் பிரிந்த தோழர்களின் வருத்தத்திற்கு உவமையாக, வாட்போரில் தகைமை சான்ற தன் மருப்பை இழந்த. செருக்குடை யானையின் துன்பத்தைக் கூறுகின்றார்.

" தருக்குடை வேழம் வாளார்
ஞாட்பினுள் தகைமை சான்ற
மருப்புடன் இழந்தது ஒத்தார் " 1133.

முத்தொள்ளாயிர ஆசிரியர் போர்க்களத்தில் கொம்பும் நகமும் இழந்த களிறு, பிடி முன்பு செல்ல நாணுவதாய்ப் பாடுகின்றார். இதிலிருந்து களிறு தன் கொம்பின்மீது கொண்டுள்ள பற்றும், அதை இழந்தால் படும் துன்பமும் வெளிப்படுகின்றன

தவக்கோலத்தில் இருக்கும் தாய் கூறிய துன்பமான வரலாற்றைக் கேட்ட சீவகன் தன் நிலையை ' இடை மகன் கொன்ற இன்னா மரத்தினேன் ' - என்று குறிப்பிடுகின்றான். இந்த உவமை ஆழ்ந்த பொருள் உடையது. இடையன், மரக் கிளையை அறவே வெட்டி மரத்தினின்றும் பிரித்துவிடாமல் பாதியாக வெட்டிக் கிளையைச் சாய்த்துவிடுவான், ஒட்டியும் ஒட்டாமலும் கிடக்கும் கிளையை ஆடுகள் எட்டி மேயும். பின் அக்கிளை காய்ந்தும் காயாதும் கிடக்கும். மரக் கிளையைப் பாதி வெட்டிவிட்ட இடையன், சச்சந்தனைக் கொன்ற கட்டியங் காரனுக்கும்; பாதி வெட்டுண்டு மரத்தில் ஒட்டியும் ஒட்டாமலும் கிடந்து, காய்ந்தும் காயாதும் இருக்கும் கிளை, தந்தையை இழந்து தாயைக்கண்டு துன்பமும் இன்பமும் அடையும் சீவகனுக்கும் உவமைகளாகின்றன. " தமிழிலக்கியத்தில் காணப் பெறும் மிகச்சிறந்த உள்ளத்தைக் கவரும் உவமைகளுள் இதுவும் ஒன்று."

சீவகன் நாட்டில், மக்கள் 'ஒருவனுக்கு ஒருத்திபோல உளம்மகிழ்ந்து (2377) வாழ்ந்ததாய்க் குறிப்பிடுகின்றார். இதுவும் ஓர் அரிய உவமை,

முற்காலத்தில் உயர்ந்த அணிகலன்களைக் குடத்தில் இட்டு வைப்பது வழக்கம் 'அருங்கலச்செப்பு' என்ற நூலின் பெயரே இதை நமக்கு அறிவிக்கின்றது. தேவர், 'பொற் குடத்தில் திருமணிகளைப் பெய்து வைப்பது போல (2639) என்ற உவமை கூறி உடம்பை எண்ணிலாக் குணங்களால் நிறைக்கவேண்டும் என்கின்றார். பொற்குடமும் திருமணிகளும்! உடம்பும் உயர்ந்த பண்புகளும்!-உவமையை எண்ண எண்ண உள்ளத்தில் தேனூறு பாய்கிறது! வெறுங்குடம்போல் வெற்றுடம்புகள் சில இருப்பது நினைவுக்கு வருகின்றது!

கேட்பதற்கே அருவருப்பாக இருக்கும் உவமை ஒன்றைக் கூறித் தேவர் துறவுள்ளத்தைப் புலப்படுத்துகின்றார்: சீவகன் தன் மனைவியரை, புண்மேற் குழிபோல் துறந்ததாகக் கூறுகின்றார். (7960) புண்ணை ஆற்றுதற்கு அதன் மேலிட்ட துணியை எண்ணினால் அருவருப்புத் தோன்றுகிறது; துறவியின் உள்ளம் அத்தகையது!

தேவர் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்த சில பொருள்களும் நிகழ்ச்சிகளும் திரும்பத் திரும்பப் பல பாடல்களில் உவமைகளாக வெளிப்படுகின்றன. வானவில் ஒன்பது இடங்களிலும் திங்களைப் பாம்பு விழுங்குதல் பதினொரு இடங்களிலும் தாமரை மலர் பனியாற் கருகுதல் ஐந்து இடங்களிலும் பாரதக் கதைகள் இருபதுக்கு மேற்பட்ட இடங்களிலும் உவமைகளாக வருகின்றன.

திருத்தக்கதேவர் கூறியுள்ள உவமைகள் யாவும் இலக்கியச்சுவை மிக்கவை. கற்பவர் உள்ளத்தில் என்றும் நின்று நிலைத்திருக்க வல்லவை. அவர் கூறியுள்ள உவமைகள் என்றும் சிறந்து விளங்கும்.

கூட்டுப் பண்ணை

சி. அ.

மக்கள், தங்கள் வாழ்க்கையின் பொருட்டுச் செய்கின்ற தொழில்களை இருவகையில் செய்வர். ஒன்று ஒவ்வொருவரும் தனித்தனியே இருந்து தங்களுக்கு விருப்பமான தொழிலைச் செய்வது; மற்றொன்று பலர் கூட்டாகச் சேர்ந்து ஒரு தொழிலைச் செய்து அதனால் கிடைக்கும் பயனைப் பலரும் பகிர்ந்துகொள்வது. கூட்டுமுறை, வாணிபத்தில் மிகுதி. என்றாலும், உழவுத் தொழிலிலும் சில வேளைகளில் கூட்டுமுறை நடைபெறுவதுண்டு. நிலங்கள் நல்ல ஆற்றுக்கால் பாய்ச்சல், பெரிய ஏரி நீர்ப்பாய்ச்சல் இவைகளைச் சார்ந்திருப்பின் உழுவோர் பலர் ஒன்றுகூடிப் பயிர் செய்யவேண்டிய அவசியம் இல்லை. ஆனால், நிலங்கள் இறைத்துப் பயிரிடவேண்டியனவாய் இருப்பின், அவ்விடங்களில் சிலர் ஒன்றுகூடித்தான் பயிர் செய்யவேண்டியிருக்கும். ஏனெனில், இறைத்தல் தொழிலை ஒருவரே செய்ய இயலாது. மிகப்பெரிய பண்ணையையுடையவர்கள் ஆட்கள் பலரைவைத்து எல்லாவற்றையும் செய்து கொள்வார்கள்; அவர்களை இங்குக் குறிப்பிடவில்லை. சிறிது நிலம் வைத்துக்கொண்டிருப்பவர்கள்தாம் இங்குக் குறிக்கப் படுகின்றனர். இறைத்தல் தொழிலுக்கு இக்காலத்தில் இயந்திர சாதனங்கள் ஏற்பட்டுவிட்டன. அதனால், சிறிய பண்ணைகள் கூடக் கூட்டுமுறை இல்லாமலே பயிர்செய்ய வாய்ப்பு இருக்கிறது. ஆனால், முற்காலத்தில் அவ்வாறு இல்லை. அதனால் சிறிய கூட்டுப்பண்ணைகள் அக்காலத்தில் சில இடங்களில் நிகழ்ந்துவந்தன. திருமூலர் ஒரு கூட்டுப்பண்ணையைக் குறிப்பிடுகின்றார்.

அண்ணன் தம்பிகள் இருவர். அவர்களுக்கு இருக்கின்ற நிலம் இறைத்துப் பயிர்செய்யவேண்டியவை. இறைப்பதற்கு ஏழு துரவுகள் உள்ளன. ஆனால், இறைப்பதற்கு இடப்பட்ட ஏத்தங்கள் ‡இரண்டே. இந்த இரண்டு ஏத்தங்களையும் ஏழு

---

‡ 'ஏத்தம்' என்பதே சரியான சொல்; 'ஏற்றம்' என்பது உயர்வைத்தான் குறிக்கும்; நீர் இறைக்கும் ஏத்தத்தைக் குறியாது. "ஆம்பியும் கிழாரும் வீங்கிசை ஏத்தமும்" என்ற சிலப்பதிகார அடியைக் காண்க (நாடுகாண் காதை-110.)

துரவுகளில் எடுத்தெடுத்துவைத்து மூத்தவன் நீர் இறைப்பான்; இளையவன் நீர் பாய்ச்சுவான். நீர் பாய்ச்சும் பொறுப்பை மூத்தவன் இளையவனிடத்திலே விட்டுத் தான் இறைத்துக் கொண்டிருக்கிறான். ஆனால் இளையவன் அறிவு முதிராதவன்; அனுபவம் இல்லாதவன்; ஆகையால், இறைக்கப்பட்டு வருகின்ற நீரை எல்லாம் பயிர் உள்ள வயலுக்குப் பாய்ச்சாமல், வெறும் கரம்பு நிலங்களில் கொண்டுபோய்ப் பாய்ச்சுகிறான். காரணம், பயிர் எது, புல் புதர்கள் எவை என்று அறிந்து கொள்ள அவனால் இயலவில்லை. மூத்தவன் அறிவுறுத்தியும் அவனால்அறிந்துகொள்ள இயலவில்லை. இளையவனால்நீர்இறைக்க இயலாது; அதனால், பின்னும் மூத்தவனே நீர் இறைக்கிறான் இளையவன் அந்த நீரையெல்லாம் கரம்பு நிலங்களுக்கே பாய்ச்சுகிறான்; பயன் என்ன என்கிறார் திருமூலர்.

இறைத்துப் பயிர் செய்ய வேண்டிய நிலங்கள் எவை? 'நன்னெறி, தீநெறி' என்பன. அவற்றிற்கு நீர்தரும் ஏழு துரவுகள் எவை? எழுவகைப் பிறப்புக்கள். அவைகளுக்கு உள்ள இரண்டு ஏத்தங்கள் எவை? சுத்த மாயை, அசுத்த மாயை என்னும் இருவகை மாயைகள். அந்த ஏத்தங்களைக் கொண்டு நீர் இறைக்கமாட்டாத இளையவன், அம்மாயைகளைக் காரியப்படுத்தமாட்டாத உயிர். இறைக்கின்ற மூத்தவன், அம்மாயைகளைக் காரியப்படுத்தி உயிருக்கு உதவுகின்ற இறைவன். இறைக்கப்படும் நீர், அக்கருவிகளால் நிகழும் முயற்சிகள். முயற்சியாகிய நீரை உயிர், 'நன்னெறி' என்னும் நிலத்தில் பாய்ச்சினால், பசுபுண்ணியமாகிய அறமும், பதி புண்ணியமாகிய தவமும் வளர்ந்து, உலக போகமும், சிவபோகமும் ஆகிய விளைவைத்தரும். ஆனால், தீநெறியாகிய பாழ் நிலத்தில் பாய்ச்சினால், பாவமாகிய புதர்கள் வளர்ந்து, நரகமாகிய முள்ளையும், சில தழைகளையுமே தரும் என்று இவ்வாறு அழகுபடக்கூறி நம்மையெல்லாம் எச்சரிக்கின்ற அத்திருமந்திரம் இது:

> ஏத்தம் இரண்டுள ; ஏழு துரவுகள் ;
> மூத்தான் இறைக்க, — இளையான் படுத்த நீர்
> பாத்தியிற் பாயாது பாழ்ப்பாய்ந்து போயிடின்
> கூத்தி வளர்த்ததோர் கோழிப்புள் ளாமே.

கூத்தி - தாதி. தாதி வளர்க்கும் கோழி அவளுக்கு பயன் படாது; அவள் தலைவிக்குத்தான் பயன்படும்.

களவிருல் விளைந்தது

செஞ்சொற்கொண்டல், வித்துவான்,

திரு. சொ. சிங்காரவேலன் M. A.. Dip. Ling.

வாழ்க்கைக்குப் பொருள் வேண்டும். பொருளில்லாத வாழ்க்கை இன்பமான வாழ்க்கை ஆகாது. பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்ருர் வள்ளுவர். இக்கருத்துக்களெல்லாம் அவனுடைய சிந்தையில் அலைமோதுகின்றன. அவனே அறிவு சான்ற தலைவன்; அறம் நிறைந்த நெஞ்சத்தவன்; அறமும் அறிவும் நிறைந்த அவனுடைய தெளிந்த நெஞ்சம் எதையும் எண்ணுமல் துணிவதில்லை. ஒரு செயலைத் தொடங்குகின்ருன் என்ருல் அச் செயலின் பின் விளைவு முன்விளைவு முதலியவற்றை எண்ணியே மேற்கொள்வது என்பது அவனுடைய சிறந்த பழக்கங்களில் ஒன்று. ஆகவேதான் அவன் சிந்திக்கின்ருன்:

அவனுக்கு வாய்த்த தலைவியோ மலரினும் மெல்லிய நெஞ்சுடையவள்; நுண்ணிய அறிவுடையவள்; கணவனுக்கிசைந்த காதல் பூங்கொடி; அவன் எண்ணத்துக்கு என்றுமே அவள் எதிர் நின்றதில்லை; எதிர் நிற்கவும் எண்ணியதில்லை. அவன் மேல் அவ்வளவு அசையா நம்பிக்கை; பற்று; அன்பு. இத்தகைய தன் செம்பாதியை - வாழ்க்கைத் துணைவியைப் பிரிந்தல்லவோ செல்லவேண்டும் என்று எண்ணுகின்ருன். தான் பிரியும் செய்தி செவியிற் புகுந்தாலே செயலற்றுவிடுவாளே என்றும் எண்ணுகின்ருன். ஆயினும் அன்பான இல்வாழ்க்கைக்குத் தென்பான பொருளைத் தேடவும் வேண்டுமே என்று கருதுகின்ருன். இரண்டு நினைவுகளுக்குமிடையில் அவன் இதயம் படும் பாடு சொல்லும் தரத்தது அன்று.

இரண்டு மதயானைகள். தேய்ந்து முறுக்கவிழ்ந்த பழங் கயிறு ஒன்றை இருபுறமும் பிடித்துத் தத்தம்போக்கில் இழுத்தால் அக் கயிற்றின் நிலை என்ன ஆவது? அந்நிலைதான் இவனுடையது எனலாம். தலைவியிடம் தன் பிரிவுச் செய்தியை எப்படிச் சொல்வது என்று தயக்கம். தழுவியகை தளர்ந்தாலே தாங்கமுடியாத மென்மை அவள் தன்மை ஆயிற்றே என்று மயங்குகின்ருன். "ஆயினும் என்ன? எப்படியும் சொல்லித் தானே தீர்வேண்டும்!" அவனுக்கு மனப் புயல் ஓயவில்லை.

அவள் வருகிருள்; "என்ன சிந்தனை?"

"ஒன்றும் இல்லை; நம் வாழ்க்கைபற்றி எண்ணிக்கொண்டு இருக்கிறேன்" என்கிருன் அவன். புன்சிரிப்பு அவள் உதடுகளில் ஓடி நெளிகிறது. அவனுடைய அகன்ற மார்பைக் கூர்ந்து நோக்குகிருள் அவள். அவளுடைய விழிகளில் ஏதோ ஒன்றைத் தேடுகிருன் அவன். அவனுடைய இதழ்கள் ஏதோ சொல்லத் துடிக்கின்றன. ஆயினும் அவள்மேல் வைத்த அன்பு அவனைப் பேசாதவனுக்கிவிடுகிறது.

இரண்டொருநாட்களாகவே அவனுடைய போக்கை ஆழ்ந்து நோக்கிவரும் அவளுக்கு அவன் ஏதோ சொல்லத் துடிக்கிருன். ஆனாலும் சொல்ல மறைக்கிருன் என்று புரிகிறது. அடிக்கடித் தன்பக்கம் வருவதும், அன்பு கனிந்த சொற்களால் அவளைப் பாராட்ட முற்படுவதும் அவளுக்குப் புரியாத புதிர்களாய் உள்ளன. அவள் உள்ளத்தின் ஒரு கோடியில் அச்சத்தின் அரும்பு ஒன்று தோன்றுகின்றது. 'பிரியேன்; பிரிந்தாலும் தரியேன்' என்று அவன் முன்னொருநாள் உரைத்த வாய்மொழி அவள் உள்ளத்தில் முந்துகின்றது. இப்போது அவனது செய்கைகள் அவளது நெஞ்சத்தைச் சிறிது அசைக்கின்றன. பிரியாத இன்பத்துக்குத் தடை வந்துவிடுமோ என்று எண்ணுகின்ருள் அவள்.

அச்சம் என்பது மிகக் கொடியது; அது தன்னுல் கொள்ளப்பட்டவரைக் கொன்றுவிடும் என்பது உலகு அறிந்த உண்மை. அஞ்சி அஞ்சிச் சாதல் அறிவு உடைமை அன்று. அச்சமே கீழ் மக்களது ஆசாரம். என்னதான் அறிந்தவளாய் இருந்தாலும் அவளையும் அச்சம் ஆட்கொள்ளுகிறது.

பகலவன் மறைந்தான்; மாலைப் பகைவனும் மறைந்தான்; இனிக்கும் இன்ப இரவு வந்தது. வெளிப்புறம் இருந்து வீடு வந்த இவன் சிந்தனை தோய்ந்த முகத்துடன் புகுகின்ருன். இன்னும் அவன் உள்ளப் புயல் ஓய்ந்தது இல்லை. 'மனைவியைப் பிரிவதா? மாண் பொருள் விழைவதா' என்பதே அவன் உள்ளமெல்லாம் நிறைந்திருக்கும் எண்ணம். இனிய உணவுகளை வாய் பேசாது உண்டான். அடிக்கடி அவள் முகத்தை நோக்கினுன். 'ஏன் என்னவோபோல் இருக்கிறீர்கள்' என்கின்றது யாழின் குரல். 'ஒன்றும் இல்லையே' என்று ஆண்மை இசைக்கிறது.

இனிய நிலவு; எங்கும் ஒளி வெள்ளம்; நிலாமுற்றத்தில் அழகான மஞ்சம். அதிலே அவன் அழகுக் காளையெனக் கிடக்கின்ருன். அருகிலே அவள். கவலை அவன் கண்களை மூடுகிறது.

அழகிய அப் படுக்கையின் நறுமணமும் மென்மையும் அவனை உறக்க மயக்கத்திற்கு இழுத்துச் செல்கின்றன. சாய்ந்த சற்றைக் கெல்லாம் அவன் உறங்கிவிடுகின்றான். தனக்கு 'உரியவனைப் பற்றியே எண்ணிக்கிடந்த அவளுக்கு எப்படி உறக்கம் வரும்? தனிமையின் சாரம் அவள் நெஞ்சில்; உறக்கத்தில் ஆழ்ந்த அவ் விளங்காளையின் உதடுகள் அசைகின்றன. கனவு கண்டனன் போலும். நினைவின் நிழல் அன்றோ கனவு! கனவு நிலையில் உயிர் ஒரு நெறிப் படுகின்றது; கருதியது புலனுக்கும் கனவு. அவள் அவனுடைய வாய்மொழிகளைக் கூர்ந்து பின்பற்றுகின்றாள்.

அவன் பேசுகின்றான்:— "நீண்ட மலைகளை அடுத்த வெப்பமான பாதைகளைக் கடந்து அந்நாட்டிலே அறம் பிறழாது பொருள் தேடி திரும்புதற்குச் சிலகாலம் பிடிக்குமே; அவளை உடன் கொண்டு செல்லலாம் என்றால் செல்லும் வழியோ சிந்தனைக்கும் அருமை உடையதாயிற்றே;' தாகத்தால் நாவறண்ட யானைகள் கானல் நீரைத் தண்ணீர் என்று கருதித் திரிந்து ஏமாற்றத்தொடு உலவும் கொடுவழி ஆயிற்றே? விட்டுச் சென்றால் காவல் பொருந்திய மனையகத்தே இருந்து பிரிவுத் துயரம் பொறுத்து இல்லறம் புரியும் வல்லமை உடையவள் ஆவளோ?"

இவ்வார்த்தைகளைத் தொடர்ந்து கேட்ட அவளது கண்கள் குளமாகிவிடுகின்றன; கண்ணீர்க் கடலில் இரவென்னும் பகைவனை எதிர்த்துப் போராடி, உதிக்கின்ற சூரியனைக் கண்டு ஒருவாறு துன்பந் தணிகின்றாள் அவள். கனவில் தன் உள்ளக் குறிப்பைத் தன்னை அறியாது வெளிப்படுத்திவிட்ட தன்மையை அவனும் அறியவில்லை.

அவனுக்கும் அவளுக்கும் இடையில் நின்று அன்பு நெறி கூட்டிய ஆருயிர்த் தோழி வருகின்றாள். கண்கள் சிவந்த அவளைக் கண்டு வருந்துகின்றாள். காரணம் வினவுகின்றாள். நடந்ததைக் கூறி வருந்திய அவள் தோழியினிடத்தே மேலும் கூறுகின்றாள்:- "அன்புத் தோழி! அவர் கருத்திலே கொண்டது அதுவானால் அவரை இன்றி நான் உயிர் வாழும் ஆற்றல் பெற்றிலேன்; ஆதலால் ஒன்று கூறுகின்றேன் கேள்:- இன்பக் காலத்து செம்பஞ்சுக் குழம்பில் முல்லை அரும்பைத் தோய்த்து என் தோளில் எழுதிய தொய்யிலை மறந்தாரோ? இதனை மறந்து என்னைப் பிரிந்தார் என்றால் ஊரார் சொல்லும் பழிச்சொல்லையும் மறந்தாரோ? அவர் என்னைப் பிரிந்து போகும்போதே என் உயிரும் பிரிந்து சென்றுவிடும் என்று அவரிடம் கூறிவிடு.

நெஞ்சு நடுக்குறும்படியாகக்கேட்டும் ஐயுற்றும் அஞ்சியஅச்சமே ஒருவரைத் துன்புறுத்தும் என்று வழங்கும் சொல் என்னளவில் மெய்யாகிவிட்டது.

கண்ணீர் வடித்தாள் அவள். உள்ளத்தே நிகழும் உணர்ச்சிப் போராட்டங்களை ஓவியமாக்கும் இக்காட்சி பெருங் கடுங்கோ என்ற கவியரங்கேறிய காவலரின் இனிய கவிக் காட்சி. பெண்மையின் குரலாக இந் நிகழ்ச்சியைச் சுருங்கிய சொற்களில் புனைந்துரையின்றி அப்படியே அழகுறத் தீட்டியுள்ளார். அவ்வழகிய காட்சியை உள்ளடக்கிய அப் பாலைக் கலிப் பாடல் இதோ உங்கள் முன் விருந்தாக வருகிறது :-

நெஞ்சு நடுக்குறக் கேட்டும் கடுத்தும்தாம்
அஞ்சிய தாங்கே அணங்காகும் என்னும்சொல்
இன்றீங் கிளவியாய் வாய்மன்ற நின்கேள்
புதுவது பன்னாளும் பாராட்ட யானும்
இதுவொன் றுடைத்தென எண்ணி அதுதேர
மாசில்வண் சேக்கை மணந்த புணர்ச்சியுள்
பாயல்கொண் டென்தோள் கனவுவார் ஆய்கோல்
" தொடிநிரை முன்கையாள் கையாறு கொள்ளாள்
கடிமனை காத்தோம்ப வல்லுவள் கொல்லோ ?
விடுமருப்பு யானை இலங்குதேர்க் கோடும்
நெடுமலை வெஞ்சுரம் போகி நடுநின்றெம்
செய்பொருள் முற்றும் அள ''வென்றார் ; ஆயிழாய் !
தாமிடை கொண்ட ததுவாயின் தம்மின்றி
யாமுயிர் வாழும் மதுகையிலே மாயின்
தொய்யில் துறந்தார் அவரெனத் தம்வயின்
நொய்யார் நுவலும் பழிநிற்பத் தம்மொடு
போயின்று சொல்லென் னுயிர்.

(பாலைக் கலி - 23)

ஜ்யேஷ்டாதேவி

வேதாந்த சிரோமணி,

பிர்மஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரிகள்

ஜ்யேஷ்டாதேவியின் வழிபாடு முற்காலத்தில் இருந்ததாகத் தெரிகின்றது. சிவாலய நிர்மாணத்தைப்பற்றிக் கூறும் காச்யப சில்ப சூத்திரத்தில் 'முதல் பிராகாரத்தில் எட்டு பரிவார தேவதைகளையும், இரண்டாம் பிராகாரத்தில் பதினாறு பரிவார தேவதைகளையும், மூன்றும் பிராகாரத்தில் முப்பத்திரண்டு பரிவார தேவதைகளையும் வைக்கவேண்டும். எல்லாப் பரிவாரங்களையும் ஒரே பிராகாரத்தில் வைக்கலாகாது' எனக் கூறிய பிறகு பரிவார தேவதைகளை வைக்கவேண்டிய இடங்களைக் கூறுகிறது. முதல் பிராகாரத்தில்,

वारुणे षण्मुखञ्चैव ज्येष्ठा वै वायुकोणके

என்ற காச்யப சில்ப சூத்திரம் உத்தரபாகம் 46 ஆவது படலத்திலுள்ள வாக்யத்தினால் ஆறுமுகனை மேற்கிலும், தென்மேற்கு மூலையில் ஜ்யேஷ்டா தேவியையும் ஸ்தாபிக்கவேண்டும் என்று கூறுகிறது. ஆனால் தற்காலம் சில சிவாலயங்களில் பூஜை முதலியன இன்றி கவனிப்பாரற்றும் சில ஆலயங்களில் இந்த தேவியின் விக்ரஹமே அப்புறப்படுத்தப்பட்டு, அந்த இடம் சூன்யமாகவும் இருக்கிறது ஜ்யேஷ்டா என்ற பெயருடன் வாமா முதலிய சக்திகளில் ஒன்றும் சனைச்சரனுடைய பத்னியும் உள்ளனர்.

ஸ்வரூபம் :

பத்ரபீடத்தில் தொங்கும் காலுடன் உட்கார்ந்த நிலை, இரு கைகள், தொங்கும் உதடு, பெருத்த நாசிகை தொங்கிய கொங்கைகள், ஒட்டிய வயிறு சிவந்த ஆடை, மைபோல் கறுத்த நிறம். ஸகல ஆபரணங்களும் பூண்ட நிலை, நெற்றியில் பொட்டு, சிதறிய கூந்தல் வலதுகையில் நீலோத்பலம். இடது கை தொடையின்மீதோ அல்லது ஆசனத்திலோ இருக்கும். சில ஆகமங்களில் அபயஹஸ்தமும் உத்பல ஹஸ்தமும் என்றும் கூறுகிறது. சில்ப சூத்திரத்திலோ வலது கையில் தண்டமும்

இடது கையில் ஊசியும் உடையவள் எனக் கூறுகிறது. மேலும் வலது பாதம் தொங்கும் நிலையிலும் இடது பாதம் உத்குடிகாஸனத்திலும் உள்ளதாகவும் கூறுகிறது.

द्विभुजानलसंकाशा लम्बोष्ठा तुङ्गनासिका
लम्बमानस्तना कुक्षिक्षीणा चारक्तवाससी
उत्पलं दक्षिणे हस्ते वामे तु करकान्विता
सर्वाभरणसंयुक्ता विश्लथाबद्धमूर्धजा
काकध्वजसमायुक्ता ललाटे तिलकान्विता

எனவும்,

द्विभुजा दक्षिणे हस्ते दण्डं वामे च सूचिकाम्
लम्बितं दक्षिणं पादं वाममुत्कुटिकासनम्

எனவும் காச்யப சில்பசூத்திரம் கூறுகிறது. விஷ்ணு தர்மோத்தரத்தில்,

उत्पलाभयहस्तेयं द्विभुजा वीरवन्दिता

எனவரும்.

இந்த தேவியின் வலது பக்கத்தில் விருஷப முகமுடைய விருஷன், ஒரு கையில் தண்டமும் மற்றொரு கையில் சூத்ரமும் உடையவன். வலது கால் தொங்கிய நிலை (அதாவது பூமியிலும்) இடது கால் ஆசனத்திலும் வைத்திருக்கவேண்டும். இந்த விருஷன் தேவியின் புதல்வன். தேவியின் தோள் உயரம் இருக்கவேண்டும்.

இடது பக்கத்தில் :

वृषो वै दक्षिणे त्वेवं वामे त्वग्निस्तथा भवेत्

என்ற காச்யப சில்பசூத்ர வாக்யத்தினல் இடது பக்கத்தில் அக்னி என்று கூறப்படுகிறது. ஆனல்

कन्यापुत्रान्विता देवी

என்ற பூர்வ காரணாகம வாக்யத்தினல் கன்னியோடும் புத்திரனோடும் கூடியவள் தேவி என்று தெரிவதாலும், அம்சுமத்பேதாகமத்தில் உள்ள

वृषो वै दक्षिणे त्वेवं वामे त्वग्निप्रोच्यते

என்ற வாக்கியத்தினல் அக்னிமாதா என்ற தேவியின் பெண் இடது பக்கத்தில் இருக்கவேண்டும் எனத் தெரிவதாலும், இந்த அக்னிமாதா என்ற தேவியின் குமாரிக்கு, அழகிய கொங்கை, நிரம்பிய யௌவனம், கரண்ட மகுடம், கறுத்த நிறம், ரக்த வஸ்திரம் இரு கண்கள் என லக்ஷணம் கூறுமிடத்தில், பெண்பாலாகவே கூறியிருப்பதாலும், நங்கவரம் முதலிய ஆலயங்களில் தற்காலம் உள்ள ஜ்யேஷ்டா தேவியின் இடதுபக்கம் பெண் தெய்வமே இருப்பதாலும் இடது பக்கத்தில் தேவியின் குமாரி அக்னிமாதா இருக்கவேண்டும்.

ஜ்யேஷ்டாதேவிக்கு வாஹனம் கழுதை கொடி காகம் ஆயுதம் துடைப்பம் என்பன. இவை கீழ்வரும் நிகண்டு வாக்கியங்களால் அறியப்படுகின்றன.

முகடிதௌவை கலதி மூதேவி காக்கைக்கொடியாள்
கழுதைவாகனி கேட்டை கெடலணங்கு சேட்டை
சேட்டை பெயரே (சேந்தன் திவாகரம்)

கழுதையூர்தி காக்கைக்கொடியாண் முகடி தௌவை
கலதி மூதேவி, எனவும், சீர்கேடி கேட்டை
கெடலணங் கேகவேணி சேட்டையென
விளம்புவர், எனவும், வாகனம் கழுதை படை
துடைப்பம் காகங் கொடியெனக் கழறல் வேண்டும்
(பிங்கள நிகண்டு)

சேட்டை இந்திரைக்கு மூத்தாள் சீர்கேடி சிறப்பிலாதாள்
ஈட்டிய யேகவேணி நெடுங்காக துவசமுற்ருள்
கேட்டையே கெடலணங்த கழுதைவாகனி கேடெல்லா
மூட்டிய கலதி தௌவை முகடி மூதேவி யாமே
(பிங்கள நிகண்டு)

பேதம் :

रक्तज्येष्ठा च नीला च भूतलार्पितपादका

என்ற விஷ்ணுதர்மோத்தர வாக்யத்தால் ரக்தஜ்யேஷ்டா, நீலஜ்யேஷ்டா என இந்த தேவி இருவகைப்படுவர்.

வரலாறு :

आदिशक्तेः समुत्पन्ना पश्चादुदधिसंभवा

என்ற சுப்பிரபேதாகம வாக்கியம் ஆதிசக்தியிடம் தோன்றிய இவள் பிறகு கடலில் உண்டானுள் எனக்கூறும்.

பாற்கடலைக்கடையும்பொழுது காலகூட விஷத்திற்குப்பிறகு தோன்றினாள். தேவர்களை நோக்கி உங்களுக்கு வரம் என்ன வேண்டும் எனவினவினாள். இந்ததேவியைவிரும்பாத தேவர்கள் "தாயே தம்பதிகளுக்குள் சண்டை நடக்குமிடம், கால்கழுவாமல் அனுஷ்டானம் ஆசமனம் செய்பவன் வீடு, குழந்தைகள் வீட்டிலிருக்க பொருள்களை அவர்களுக்குக் கொடுக்காமல், நல்ல போக்கியமானபொருள்களை பெரியவர்களே அனுபவிக்கும் வீடு; கேசம், குப்பை, எலும்பு, சாம்பல் முதலிய அசுத்தமான பொருள்கள் சிதறிக்கிடக்கும்வீடு, சூர்ய உதய காலத்தில் இல்லாள் தூங்கும்வீடு, இல்லாள் சாணிதெளித்து வாசலில் கோலமிடாத வீடு, இந்த இடங்களில் நீ உன்கணவன் கலியுடன் வாழ்ந்து துன்பங்களை அவர்களுக்குக் கொடுப்பாயாக" என்று வரம் கேட்டனர் அவ்விதம் ஜ்யேஷ்டாதேவி வரம்கொடுத்து இருப்பதாக பத்ம புராணம் உத்தரகண்டம் 232 படலம் கூறும். ज्येष्ठा कलेः पत्नी என்ற சுப்பிரபேத ஆகம வாக்யமும் கலியின் பத்னி என்றே கூறும்.

மற்றொரு புராணம், கடலில் தோன்றிய இவளை ஒருவரும் மணக்க முன்வரவில்லை. கபிலர் என்ற முனிவர் மணந்தார் ஆதலின் இந்த தேவி கபிலபத்னி என்று கூறப்படுகிறாள் என்று கூறுகிறது.

லிங்க புராணம் :

கடலில் தோன்றிய இவளை ஒருவரும் மணக்காதபடியால் துஸ்ஸஹர் என்ற முனிவர் மணந்தார். அவளுடன் தன்னுடைய ஆச்ரமம் சென்றார். சிறிது காலத்தில் சிவன் விஷ்ணு நாமங்களை இவள் கேட்க விரும்பாமல் காதைப் பொத்திக்கொண்டதையும், புண்யமான காரியங்களில் அவளுக்கு வெறுப்பு இருப்பதையும் அறிந்தார். அவளுடன் இருந்து தவம் செய்ய முடியாமல் வருந்திய காலத்தில் மார்க்கண்டேய முனிவர் வந்தார். அவரிடம் துஸ்ஸஹர் தன் குறைகளைத் தனிமையில் கூறினார்; அவர் "அவளை அழைத்துக்கொண்டு அசுத்தமான இடங்கள், தம்பதிகளுக்குள் சண்டை நடக்கும் வீடு முதலிய இடங்களுக்குப்போ" என்று கூறினார். துஸ்ஸஹர் அம்மாதிரியே செய்து, கடைசியில் "நாம் வசிக்க நல்லதொரு இடம் பார்த்து வருகிறேன் இந்த இடங்களில் இரு" என்று கூறி தடாகத்தில் மூழ்கி பாதாளம் சென்றார். இன்னும் திரும்பவில்லை. மூதேவியும் அவரை எதிர் பார்த்துக்கொண்டு முற்கூறிய இடங்களில் வசித்துவருகிறாள் என்று கூறும்.

மூதேவி அரசமரத்தில் வசிப்பதாகவும், சனிக்கிழமைதோறும் லக்ஷ்மிதேவி தன் சகோதரியைக் காண அங்கு செல்வதாகவும், ஆதலால் சனிக்கிழமைதினம் அரசமரத்தை வலம்வந்து தொட்டு வணங்கினால் லக்ஷ்மி கடாக்ஷம் உண்டாகும், மற்ற நாட்களில் அரசமரத்தைத் தொடலாகாது என்றும் பெரியோர் கூறுவர்.

போதாயனரிஷி கிருஹ்ய சூத்திரம் எட்டாவது பிரச்னத்தில் விநாயக கல்பம், ஸரஸ்வதி கல்பம், ஸ்ரீகல்பம் எனப்பல கண்டங்களில் தேவதோபாஸனைகளைக் கூறுகிறார். அதில் பத்தாவது கண்டம் ஜ்யேஷ்டா கல்பம் எனப்பெயர்பெறும். இங்கு ஜ்யேஷ்டாதேவியின் உபாசனக்கிரமம் கூறப்படுகிறது.

அடியவர் விரும்பிய ஸகல பலன்களையும் கொடுக்க கருடவாஹனன் இருக்கும்பொழுது நிர்மாணமாயுள்ளவனிடம் கூறை யாசிப்பதுபோன்று ஜ்யேஷ்டா தேவியிடம் செல்வம்பெற விரும்புகின்றீர்களே என்று மக்களை நோக்கி உள்ளம் உருகிய தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலையில் ஒன்பதாம் பாசுரத்தில் "சேட்டைதன் மடியகத்துச் செல்வம் பார்த்திருக்கின்றீரே" என அருளிச்செய்துள்ளதும் நோக்கத்தக்கது.

சோழ அரசன் ஒருவனுக்கு நரி முகத்துடன் ஒரு பெண் பிறந்தாள். வருந்திய வேந்தன் தன் குலதெய்வத்தை ஆராதிக்க "நீ நங்கவரத்தில் (திருச்சி ஜில்லாவிலுள்ளது) ஓர் ஆலயம் கட்டி அதில் குமாரியை வழிப்படச் சொல், விரைவில் அவள் மனிதமுகமுடையவளாக ஆவாள் என அசரீரியாகக் கடவுள் கூறினர். அப்படியே நங்கவரத்தில் ஆலயம் கட்டி தன் பெண்ணை வழிபடச் செய்தான். அவள் விரைவில் மனிதமுகமுடையவள் ஆனாள். நங்கை வழிபட்டமையால் "நங்கைபுரம்" காலப்போக்கில் மருவி நங்கவரம் ஆயிற்று. ஜ்யேஷ்டாதேவியின் வலதுபுறம் உள்ள விருஷபனைக்காட்டி, இது அப்பெண் வழிபட வருவதற்கு முன் உள்ள உருவம் எனவும் இடதுபுறம் உள்ள அக்னிமாதாவைக் காட்டி, வழிபட்டபிறகு மாறிய உருவம் எனவும் அங்குள்ளவர் கூறுகின்றனர். ஆனால் நடுவிலுள்ள தேவியைப்பற்றி ஒன்றும் அவர்கள் கூறவில்லை.

कालो ह्ययं निरवधिर्विपुला च पृथ्वी । காலம் முடிவற்றது. பூமி பரந்தது என பவபூதி கூறுகிறான். **भिन्नरुचिर्हि लोकः** மக்கள் பல்வேறு சுவையுடையவர் எனக் காளிதாஸர் கூறுகிறார். எங்கேயாவது, யாருக்காவது, எப்பொழுதாவது ஜ்யேஷ்டா தேவியைப்பற்றி அறிய விருப்பம் உண்டாகலாமாதலின் அந்த தேவியைப்பற்றி கூறலாயிற்று.

குருபூஜை விழாவில் :



ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள்
பட்டணப்பிரவேசத்திற்கு எழுந்தருளல்.

குருபூஜை விழாவில் :



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
பட்டணப்பிரவேசத்திற்கு அன்பர்கள் புடைசூழ எழுந்தருளல்

திருநெறிய தெய்வத் தமிழ்மாநாடு

(20—5—67 முதல் 30—5—67 முடிய)

தருமையாதீனம் திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தில் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி மகோற்சவத்தை முன்னிட்டு அவ்வுற்சவ நாட்களில் திருநெறிய தெய்வத் தமிழ்மாநாடு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாணைப்படி மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஒவ்வொருநாளும் காலையில் சிவ ஞானபோதப் பாடவகுப்பு சிறப்பாக நடைபெற்றது. தருமையாதீனப் புலவர், மகாவித்துவான், சித்தாந்தக் கலைமணி, திரு. சி. அருணைவடிவேலு முதலியாரவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் திருமுன்னிலையில் வகுப்பை மிகச் சிறப்புற நிகழ்த்தினார்கள்.

20—5—67 முதல் திருநாள்

தருமையாதீன சென்னை சமய பிரசார நிலையம் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், குருஞானசம்பந்தர்க்கும் திருஞானசம்பந்தர்க்கும் உள்ள தொடர்பைப் பண்டார மும்மணிக்கோவைப் பாடல் ஒன்று காட்டி விளக்கினார்கள்.

தொடக்கவுரையாற்றிய மதுரை யாதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் சுந்தரமூர்த்தி சுவாமிகளது யோக வாழ்வு பற்றிக் குறிப்பிட்டார்கள்.

“ ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை உத்தமனே ” எனவரும் அவரது திருப்பதிகம், அவர் அருளுடம்பு பெற்று அருளுலகு எய்தியதைக் குறிக்கும். அவ்வாறு அருளுடல் பெற்று ஒளி உலகு பெற்றவரும் உண்டு; இருளுலகு புக்கு இடர்ப்படுபவரும் உண்டு. அவ்வவர் கருமவினைக்கு ஈடாக இறைவன் இவ்வாறு கூட்டுவிப்பான், என்று கூறி மேலும் விளக்கிப் பேசினார்கள். பிறகு, மதுரை திருமதி சிவானந்த விஜயலட்சுமி அவர்கள் “ சுந்தரர் ” என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள்.

"சமயாசாரியர் நால்வரில் சுந்தரர் வரலாறு சிறப்புடையது. சுந்தரர் திருமுனைப்பாடி நாட்டில் பிறந்தார். பரவைநாச்சியாரை மணந்தார் இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பெற்றார். இறைவனருளால் திருத்தொண்டத் தொகைபாடி அடியார்களைப் பணிந்தார். ஆலாலசுந்தரர் என்ற பெயருடன் திருக்கயிலையில் வாழ்ந்து சிவப்பணி புரிந்த இவர் பின்னர் சேரமான் பெருமாள் பின் தொடரத் திருக்கயிலை சென்று இறைவன் திருவருள் பெற்றார். சேக்கிழார் சுவாமிகள் இவர் புராணத்தைச் சுவைததும்பப் பாடியுள்ளார். சுந்தரர் பாடிய செந்தமிழ்ப் பதிகங்கள் ஞானவளம் உடையவை" என்பது அவர்கள் பேசிய பேச்சின் சுருக்கம்.

21—5—67 ஞாயிற்றுக்கிழமை இரண்டாந் திருநாளன்று வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான். ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரைக்குப் பின்னர் திருமதி சிவானந்த விஜயலட்சுமி அவர்கள் திருஞானசம்பந்தர் என்ற தலைப்பில் பேசியதன் சுருக்கம் :-

வேதநெறி தழைத்தோங்கமிகு சைவத்துறை விளங்க பூத பரம்பரை பொலிய புனிதவாய்மலர்ந்தழுத சீதவளவயற் புகலித் திருஞானசம்பந்தர் என்று சேக்கிழார்பெருமான் திருஞானசம்பந்தரைக் குறிப்பிடுகின்றார். திருமுலைப்பால் ஊட்டப்பெற்ற திருஞானசம்பந்தர் "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம் உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்" இவற்றை உணர்ந்தார். திருஅரத்துறையில் பெருமான் அளித்த சிவிகையில் ஏறும்பொழுது சிவிகையை வலம் வந்து வணங்கி, வெண்ணீற்றொளி போற்றி, உலகம் உய்ய அஞ்செழுத்து ஓதி ஏறினார் என்று கூறி திருஞானசம்பந்தரின் அற்புத நிகழ்ச்சிகள் பலவற்றைச் சேக்கிழார் கூறியமுறை பிறழாமல் எடுத்துக்கூறி விளக்கினார்கள்.

22—5—67 திங்கட்கிழமை மூன்றாந்திருநாளன்று திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம் கட்டளை விசாரணை, வித்துவான், ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற்புரை கூறியபின்னர் திருநாவுக்கரசர் என்ற தலைப்பில் திருமதி. சிவானந்த விஜயலட்சுமி அவர்கள் ஆற்றிய விரிவுரையின் சுருக்கம் :-

"புகலூர் மாதினியார் இருவருக்கும் அருந்தவப்புதல்வ ராய்ப் பிறந்து மருணீக்கியார் என்னும் பெயருடன் வளர்ந்து பின்னர் சமண்சமயம் குறுகி தருமசேனர் என்னும் பெயருடன் திகழ்ந்தார். தமக்கையாகிய திலகவதியாரின் வேண்டுகோட் கிரங்கிய பெருமான் "அன்னவனை இனிச் சூலை மடுத்தாள்வன்" என்று கூறி சூலை கொடுத்து ஆட்கொண்டான். அதுமுதலாகச் சைவம் சார்ந்து பெருமானைத் திருப்பதிகம்பாடி வழிபட்டு உழவாரப் பணிசெய்து திருநாவுக்கரசர் எனும் பெயருடன் விளங்கினார். சைவம் சார்ந்த திருநாவுக்கரசர் தில்லைத் தரிசனத் திற்குச் சென்றபொழுது,

" தூயவெண்ணீறு துதைந்தபொன் மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடிதைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வதுபோலன்புநீர் பொழி கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ்வாயும் உடைய "வராய்த் திகழ்க்தார் என்று சேக் கிழாரால் கூறப்படுகிறது.

சீகாழியில் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் ஒருவரை யொருவர் சந்தித்தபொழுது நிகழ்ந்த நிகழ்ச்சியைச் சேக்கிழார்,

" அருட்பெருகு தனிக்கடலும் உலகுக்கெல்லாம்
அன்புசெறிகட லுமாம்எனவும் ஓங்கும்
பொருட் சமயமுதற் சைவநெறி தான்பெற்ற
புண்ணியக்கண் இரண்டெனவும் புவனம்உய்ய
இருட்கடுவுண்ட வருளும் அகிலம் எல்லாம்
ஈன்றாள்தன் திருவருளும் எனவுங்கூடித்
தெருட்கலை ஞானக்கன்றும் அரசுஞ் சென்று
செஞ்சடை வானவர்கோயில் சேர்ந்தார்அன்றே "

என்று குறிப்பிடுகின்றார். என்றுகூறி மறைக்கதவு திறந்தது, படிக்காசு பெற்றது, விடம்போக்கியது, கல்லைத் தெப்பாக்கியது முதலிய அற்புத நிகழ்ச்சிகளையும் விளக்கி விரிவுரையாற்றி னார்கள்.

23—5—67 செவ்வாய்க்கிழமை நான்காந்திருநாளன்று திருவாரூர் இராஜன்கட்டளை, கட்டளை விசாரணை, வித்துவான் ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வரவேற் புரை கூறினார்கள். பின்னர் திருமதி. சிவானந்தவிஜயலட்சுமி

குருபூஜை விழாவில்:



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் சிவிகையில்
பட்டணப்பிரவேசமாக எழுந்தருளல்

உபராஷ்ட்ரபதியாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற
கனம். V. V. கிரி அவர்களுக்கு
சென்னையில் தருமையாதீனச் சார்பில் பொன்னுடை போர்த்தி
ஆசி வழங்கல்

அவர்கள் "அன்னை பராசக்தி" என்ற தலைப்பில் உலகத் தாயாகிய அன்னையின் சக்தி பேதங்களையும், அன்னை அடியவர்க்கருளும் பான்மையையும் பல வரலாற்றுச் சான்றுகளுடன் விளக்கி விரிவுரையாற்றினார்கள்.

24—5—67 புதன்கிழமை ஐந்தாந்திருநாள் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை வித்துவான், திருமதி. ப. நிலா அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். பின்னர் திருமதி சிவானந்தவிஜயலட்சுமி அவர்கள் "பக்த நந்தனார்" என்ற தலைப்பில் விரிவுரையாற்றினார்கள்.

நந்தனார் என்பது இவரது இயற்பெயர். இவர் புலையர் குலத்தில் பிறந்தவராயினும் பெருமானிடத்தில் பக்தியுடையவராய் விளங்கினார். "பிறைக்கண்ணி பெருந்தகையார்பால் சிறந்த பெருங்காதலினால் செம்மைபுரி சிந்தையராய், மறந்துமயல் நினைவின்றி வருபிறப்பின் வழிவந்த அறம்புரி கொள்கையராயே அடித்தொண்டின் நெறிநின்றார்" என்று இவரைப் பற்றி சேக்கிழார் குறிப்பிடுகின்றார். இவர் திருப்புன்கூர் சிவலோகன் சேவடிகளை நினைந்து சென்று வழிபட்டு நேரே கும்பிட வேண்டும் என நினைந்தார். பெருமானும் திருமுன்புள்ள நந்தியை விலக அருள்செய்தார். 'போரேற்றை விலங்க அருள்புரிந்தருளிப் புலப்படுத்தார்" என்று சேக்கிழார் இந்நிகழ்ச்சியைக் குறித்திருத்தல் காணலாம். இவ்வாறே தில்லைத் திருமன்றத்தின்முன் சென்றிறைஞ்ச பெருங்காதல் கொண்டார். பின்னர், நாளைப்போவேன் நாளைப்போவேன் என எண்ணியிருந்ததால் இவருக்குத் திருநாளைப்போவார் என்ற பெயர் வழங்கலாயிற்று என்று கூறி பக்த நந்தனார் வரலாற்றை விளக்கி விரிவுரையாற்றினார்கள்.

25—5—67 வியாழக்கிழமை ஆறுந்திருநாள் அன்று தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், தருமையாதீனப் புலவர், மகாவித்துவான், சித்தாந்தக் கலைமணி, திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் வரவேற்புரை கூறிய பின்னர் சென்னை, செல்வி, கிரிஜா என்ற குழந்தையினால் 'கண்ணப்பர்" வரலாறு கதாகாலக்ஷேபமாக தக்க பக்க வாத்தியங்களுடன் சிறந்தமுறையில் நிகழ்த்தப்பட்டது.

(தொடரும்)

செய்திகள்

ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில் மகோற்சவம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானாம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில் மகோற்சவம் பிலவங்க வருஷம் வைகாசி மாதம் 6 ஆம் நாள் (20—5—67) சனிக்கிழமை முதல் தொடங்கி நடைபெற்றது. 26—5—67 வெள்ளிக்கிழமை திருக்கல்யாண மகோற்சவமும், 28—5—67 ஞாயிற்றுக்கிழமை திருத்தேர்த் திருவிழாவும், 29—5—67 திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும், துவஜாவரோஹணமும் சிறப்பாக நடைபெற்றன.

விழா நாட்களில் விசேஷ நாதஸ்வர இன்னிசை முதலிய சிறப்பு நிகழ்ச்சிகளும் நிகழ்ந்தன. காலை மாலை இருவேளைகளிலும் பஞ்சமூர்த்திகளின் திருவீதியுலாக் காட்சியைக் கண்டு களித்தனர். திருவீதியுலாவின்போது ஆதீன வேத சிவாகம பாடசாலை ஆசிரியர் மாணவர்களால் வேத பாராயணமும், ஆதீன தேவார பாடசாலை ஆசிரியர் மாணவர்கள், ஆதீன தேவஸ்தான ஓதுவாமூர்த்திகள் முதலியவர்களால் தக்க பக்க வாத்தியங்களுடன் தேவார இன்னிசைப் பாராயணமும் நிகழ்த்தப்பட்டன. விழாக் காலங்களில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதங்களும் வழங்கியருளினார்கள்.

ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில் மகோற்சவத் திருநாட்களில் ஆதீன மடாலய முகப்பில் "திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு" நாள்தோறும் மாலை 6 மணி முதல் தொடங்கி நடைபெற்றது.

குருபூஜை விழா

தருமையாதீன முதற் குரவர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா 29—5—67 திங்கட்கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ ஆனந்த பரவசர் குருமூர்த்த தரிசனம் செய்தபின்னர் ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் வழிபாட்டிற்கு

எழுந்தருளினார்கள். அபிஷேக ஆராதனைகள் சிறந்த முறையில் நடைபெற்றன. காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் வழிபாட்டிற்கு எழுந்தருளினார்கள். குருபூஜை விழா மலராக "சிவபோக சாரம்" என்ற நூல் வெளியிடப்பட்டு அன்பர்களுக்கு வழங்கப்பட்டது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்க்ள் அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கியருளி னார்கள். ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில், ஸ்ரீ ஞானபுரீ சுவரருக்கும் ஸ்ரீ ஞானாம்பிகைக்கும விசேஷ அபிஷேக ஆராதனை கள் நடைபெற்றன. வழிபாட்டிற்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளினார்கள். அவ்வமயம் தொண்டைமண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமா சாரிய சுவாமிகள் அவர்களும், திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடம் இளவரசு வித்துவான் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் எழுந்தருளினார்கள். மாயூரம் முதலிய ஊர்களிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் அன்பர்கள் பலர் வந்திருந்து வழிபட்டனர். வழிபாட்டின்போது பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணம் நிகழ்ந்தது. வழிபாட் டிற்குப் பின்னர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் பிரசாதம் முதலியன வழங்கியருளினார்கள்.

மாலையில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் காவிரித் திருமஞ்சனத்திற்கு எழுந்தருளி குருமூர்த்த வழிபா டாற்றியருளினார்கள். பின்னர் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில், ஸ்ரீ தருமபுரீசுவரர் திருக்கோயில். ஸ்ரீ துர்க்காம்பிகை திருக் கோயில்களில் வழிபாடாற்றி ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு சிறப்பு வழிபாடாற்றி கொலு வீற்றிருந்து அருட் காட்சி வழங்கி யருளினார்கள். அன்பர்கள் கொலு வழிபாடு செய்து ஸ்ரீ சொக்க நாதப் பெருமான் திருமெய்ஞ்ஞானப் பிரசாதம் பெற்றுச் சென்றனர்.

.0—5—67 செவ்வாய்க்கிழமை பட்டணப்பிரவேசத்திருநாள். அன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம்அவர்கள் ஸ்ரீசொக்க நாதப்பெருமானுக்குச் சிறப்பு வழிபாடாற்றினார்கள் பின்னர் ஸ்ரீ அஷ்டா தசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகைக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபா டாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம்வழங்கியருளினார்கள் அடுத்து மாகேஸ்வரபூஜை ஆதின மடாலயத்தில் சிறப்புற நிகழ்ந்தது.

இரவு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் சிவிகையில் பட்டணப்பிரவேசமாக எழுந்தருளினார்கள். அன்பர்கள் பூர்ண கும்ப மரியாதைகள் செய்து வரவேற்றனர். பட்டணப்பிரவேசத் திற்குப் பின்னர் அன்பர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதா னம் அவர்களின் கொலுக் காட்சியைக் கண்டு களித்து வழிபா டாற்றிப் பிரசாதம் பெற்றுச் சென்றனர்.

இருபத்துநான்காவது குருமகாசந்நிதானத்தின்
குருபூஜை விழா

பிலவங்க௵ வைகாசி௴ 4௳ (18—5—67) வியாழக்கிழமை திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 24 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் இருபத்திரண்டாவது ஆண்டுக் குருபூஜை விழா நடைபெற்றது. காலை மாலை இருவேளைகளிலும் குருமூர்த்தி களின் ஆலயத்தில் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனை களும், திருமுறைப் பாராயணமும் நடைபெற்றன. அன்பர்கள் பலர் வந்து தரிசித்துக் குருவருள் பெற்று உய்ந்தனர்.

குருமூர்த்த ஆலயத்தில் காலை 8-30 மணி முதல் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. வித்துவான். ஸ்ரீமத். இராம லிங்கத் தம்பிரான் சுவாமிகள் "திருநாவுக்கரசர்" என்ற தலைப் பிலும், வித்துவான். ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் "திருமாளிகைத் தேவர்" என்ற தலைப்பிலும், ஸ்ரீமத். திருநாவுக் கரசுத் தம்பிரான் சுவாமிகள் "மணிவாசகர்" என்ற தலைப் பிலும், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் "திருமூல தேவர்" என்ற தலைப்பிலும், வித்துவான். சிரோமணி. திரு. வி. சபேசன் "காரைக்காலம்மையார்" என்ற தலைப்பிலும், வித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார் "சேக்கிழார்" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் காலை மாலை இருவேளைகளிலும் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். திருமுறை கண்ட புராணம் முதலிய "திருநூல் ஐந்து" என்ற நூல் விழா மலராக வெளி யிடப்பெற்று அன்பர்களுக்கு வழங்கப்பட்டது. மாலை வழிபாட் டிற்கு இருபத்துநான்கு தட்டுகளில் பழம் முதலிய நிவேதனப் பொருள்கள் வீதிவலமாக நாதஸ்வர இன்னிசையுடன் எடுத்து வரப்பெற்று நிவேதனம் செய்யப்பெற்றன.

திருவாமூரில்:

ஸ்ரீ மாதினியார்
சிவபூஜை நிலையத் திறப்பு விழா.

திருவாமூர் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் ஆலயத்தின் தென் பகுதியில் ஸ்ரீ அப்பர் சுவாமிகளின் அருந்தவ அன்னையார்

ஸ்ரீ மாதினியார் பெயரால் 1—12—65-இல் தொடங்கப்பெற்ற சிவபூஜை நிலையத் திருப்பணி பூர்த்தியாகி 1—3—67 திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் திருக்கரத்தால் திறந்துவைக்கப் பெற்றது. திறக்கும் சமயத்தில் ஓதுவாமூர்த்திகள் திருமறைக் காட்டில் திருக்கதவம் திறப்பித்த பண்ணின்நேர் மொழியாள் என்னும் திருப்பதிகத்தையும் கோளறு திருப்பதிகமாகிய வேயுறு தோளிபங்கன் என்னும் பதிகத்தையும் பண் பொருந்தப்பாடி மகிழ்வித்தனர் அறங்காவலர்களும் ஊர்ப்பொதுமக்களும் ஆலய முகப்பில் பூர்ண கும்ப மரியாதைகளுடன் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியை வரவேற்றனர். திருவாரூர் நுழைவாயிலிலிருந்து கயிலைக்குருமணியையும், சிவபூஜா துரந்தரர்களையும் வரவேற்கும் வளைவுத்தட்டிகள் அன்பர்களை வரவேற்றன. வரவேற்புத்தட்டிகள் முதலியன ஊரை அழகுபடுத்தின.

விழாவில் இருபத்தைந்துக்கு மேற்பட்ட ஓதுவாமூர்த்திகளும் எழுபதுக்கு மேற்பட்ட சிவபூஜகர்களும் உயர்நீதி மன்ற நீதிபதி கனம். R. சதாசிவம், தொழிலதிபர் திரு. N. மகாலிங்கம், இலஞ்சி வள்ளல் திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை M. A., M. L. A. திருக்குறள்வேள் திரு. ஜி. வரதராஜ பிள்ளை B. A., முதலிய பல பெருமக்களும் கலந்துகொண்டனர். சிவபூஜை நிலையம் திறந்தவுடன் எழுபதுக்கு மேற்பட்ட சிவபூஜா துரந்தரர்களுக்கு சென்னை கருப்பண்ண முதலியார் ஸ்டோர்ஸ் உரிமையாளர் திரு கே மாரிமுத்து முதலியார் உபயமாக அளித்த புத்தாடைகள் வழங்கப்பெற்றன. புது நிலையத்தில் புத்தாடை யணிந்து சிவபூஜகர்கள் சிவபூஜை செய்தது கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்து "கண்காள் காண்மின்களோ" கறைக் கண்டன் பூஜை தனை என்று சொல்லத் தோன்றியது. மேற்படி நிலையத் திருப்பணி பொதுமக்கள் நன்கொடையால் சுமார் ரூ 12000 செலவில் நிறைவேறியதாகத் திருப்பணி கமிட்டியினர் அறிவித்தனர்.

இந்த நிகழ்ச்சியையொட்டி காலை 11-மணிக்கு ஸ்ரீலஸ்ரீ மீனாட்சிசுந்தர தேசிக சுவாமிகள் தலைமையில் சிவபூஜகர் மாநாடு சிறப்பாக நடைபெற்றது. திருச்சி திருக்குறள்வேள் திரு. ஜி. வரதராசப்பிள்ளை சிவபூஜையால் வரும் நன்மைகளை விளக்கி மாநாட்டைத் தொடங்கி வைத்தார்கள். தருமையாதீனப்புலவர் திரு. க. வச்சிரவேல் முதலியார் B. A., L. T. சிவபூஜைத் தத்துவம் என்பதுபற்றியும், ஆருர் திரு. வைத்தியநாத சிவாசாரியார் முத்திரை விளக்கம் என்பதுபற்றியும் பலன் நிறைந்த சொற்பொழிவாற்றினர் ஆருர் திரு ஆ கணபதியாப் பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினார்கள். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் இந்நிகழ்ச்சிகளை உடன் இருந்து சிறப்புற நடத்தி வைத்தார்கள்.

எதிர்காலம் -திரு. கே. முத்துஜோதிடர்

(பிலவங்கஹு ஆனிமீ 1உ முதல் 32உ முடிய)
(15—6—67 முதல் 16—7—67 முடிய)

1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

மேஷராசி 9 பாதங்களும் சுபசந்தோஷங்களையும் வாகனு ரோகணம் அடிக்கடி கிராமாந்திரவாசம், சஸ்ய விருத்தி தான்ய விருத்திக்கான காரியங்கள். சதா விவசாயத்தில் பிரவருத்தி முதலிய சுபங்களைத்தந்து தனக்கும் உலக மக்களுக்கும் கூட நன்மையைச் செய்வார்கள். புதன், வியாழன் சுபமாகும்.

2. ரிஷபம் - கார்த்திகை $\frac{3}{4}$, ரோஹிணி - மிருகசீர்ஷம் $\frac{1}{2}$

விருஷபராசி 9 பாதங்களும் மகோன்னதமான தெசைகளையும் உத்தியோக லாபங்களையும் கிரக பூமி லாபங்களையும், அநேக நஷ்டதன லாபங்களையும் தந்து சஸ்யவிருத்தி தான்யாபி விருத்திகளையும் தந்து உலக பிரசித்தியையும் தரும். கிரஹ சுகம் ஓங்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

3. மிதுனம் - மிருகசீர்ஷம் $\frac{1}{2}$, திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனையே தரும். சரீரபாதைகளால் கொஞ்சம் சிரமம் உண்டுபண்ணும். மேலோர் பெரியோர் வருத்தமும் ராஜாங்க விரோதமும் உண்டாகும். ஜாக்கிரதையாக தெய்வ பலத்தோடு இருந்தால் மாதம் 15ம் தேதிக்குமேல் சௌக்கியம் உண்டுபண்ணும். சனி, ஞாயிறு சுபமாகும்.

4. கடகம் - புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் - ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் பூர்ணமான ஜயத்தைத்தரும். விவசாயம் ஓங்கும். வியவகாரம் ஜெயிக்கும். உலகில் அசாத்தியமெல்லாம் சுலபசாத்தியமாகும். கிரகபாதைகள் தானுக விலகும். புதன், வியாழன் சுபமாகும்.

5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி 9 பாதங்களும் இரவும் பகலுமாக இருக்கும். குடும்பத் தொல்லைகளும், பலவிதமான ஈதிபாதைகளும் மேலோர் பெரியோர் மனம் வருத்தமும் கொடுத்து பகவத்ஸ் மரணையால் அவைகளை மாற்றி நல்ல சாதுக்களுடைய சேர்க்கையும் செய்துகொண்டு தன் உத்தியோகாதி காரியங்களையும், குடும்ப காரியங்களையும் ஜாக்கிரதையாகக் கவனித்துவர கடவுள் காப்பார். சுபம் உண்டாகும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

6. கன்னி - உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம், சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி 9 பாதங்களும் (சித்திரை, 1, 2 பாதங்களைத் தவிர) நல்ல ராஜயோகத்தையும் சுகபோக போக்கியங்களையும் கீர்த்தி பத்திரங்களையும் உலக பிரசித்தியையும் தனதான்ய விருத்தி, சஸ்ய விருத்தி தான்ய விருத்தி ஜீவன விருத்தி சுப சோபனதிகள் முதலிய சகல மங்களத்தையும் கொடுக்கும். சித்திரை 1, 2 பாதங்கள் மிச்சிரபலனைத்தரும். வரவு செலவு சமனாகும். வெள்ளி, சனி, சுபமாகும்.

7. துலாம் - சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். வரவு செலவு சமனாகும். ஆரோக்கியக் குறைவு உண்டாகும். எல்லாம் தெய்வபலத்தால் போக்கடிக்கப்பட்டு சகல மங்களத்தையும் கொடுக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் - $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிர பலனையே தரும். வரவும் செலவும் சமமாக இருக்கும். பந்துமித்ராளுடைய சேர்க்கையையும் சந்தோஷத்தையும் உண்டுபண்ணும். புதன், வியாழன் சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனூர்ராசி 9 பாதங்களும் சுபமேயாகும். அசாத்தியமெல்லாம் சுலபசாத்தியமாகும். நூதனமாகத் தொழில் விருத்தியாகும். வித்யை விருத்தியாகும். மங்கள காரியங்கள் நடக்கும். சதா சந்தோஷமாகவே இருக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம்

மகரராசி 9 பாதங்களும் உத்தியோக உயர்வு, பந்து மித்திராளுடைய சேர்க்கை, களத்திர புத்திராதிகளுடைய சுகம் மேலோர் பெரியோர்களுடைய அன்பு எல்லாம் ஏற்படும். சந்தோஷத்தைத்தரும். புதன், வியாழன் சுபமாகும்.

11. கும்பம் அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾.

கும்பராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபம் இருக்காது. கவலையை உண்டுபண்ணும். வரவுக்கு மிஞ்சின செலவாகும். எந்தக் காரியமும் நினைத்தபடி நடக்காது. சதா தெய்வ சிந்தனையாகவே இருந்தால் மேற்படி மாதம் சுபமாக நடக்கும் வியாழன், வெள்ளி சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனைத்தான் தரும். வீண் கவலைகளையும் மனஸ்தாபங்களையும் உண்டுபண்ணும். சதா விரோதமான புத்தியே இருந்துகொண்டு இருக்கும். தெய்வ பலம் இருந்தால் ஜெயிக்கலாம். வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு :- மேற்படி முதல் விவசாயம், ஜீவனம், இவைகளில் ஈடுபடக்கூடியவர்கள், புதவார விரதம் இருந்து கொண்டு விஷ்ணுவையும் உபாசித்துக்கொண்டு, சிரத்தையாய் நடத்திக்கொண்டுவர, சஸ்ய விருத்தி, தான்ய விருத்தியெல்லாம் ஓங்கும். உலகம் சுபிக்ஷம் அடையும். கடவுள் காப்பார். சுபம் உண்டாகும்.

விசேஷ நாட்கள்

10—6—67 முதல் 10—7—67 முடிய

19—6—67	பிரதோஷம்
30—6—67	ஏயர்கோன்கலிக்காம நாயனர் திருநக்ஷத்திரம்
4—7—67	வேளூர் கிருத்திகை
5—7—67	பிரதோஷம்